Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 25 ஆம் நாள் ஷவ்வால் 1 (7-4-62) சனிக்கிழமை இதழ் 56




# தமிழரசுக் கட்சி மீது தடை நீக்கப்பட்டது

## திருக்கேதீச்சரம் 4-ம் திருவிழா

திருக்கேதீச்சரம், சனி

இன்று திருக்கேதீச்சரத்தில் நான்காம் திருவிழா நடைபெறும். இந்துக் கல்லூரி காரை நகர், யாழ் நகர்க் கல்லூரி காரை நகர் முதலியன இவ்விழாவைப் பொறுப்பேற்று நடத்துகின்றன. நாளை ஞாயிற்றுக் கிழமை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஐந்தாம் விழாவை நடத்துகின்றது.

## "சிங்கள காங்கிரஸ்"

கொழும்பு, வெள்ளி

"சிங்கள காங்கிஸ்" என்ற பெயரில் சமீபத்தில் ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உத்தியோக மொழிக கொள்கையை அமுல் நடத்தும்பொருட்டு அரசாங்கத்துக்கு உதவு முகமாக சிங்களத்தை சீர்திருத்தம் செய்வது இந்த ஸ்தாபனத்தின் லட்சியம் எனக் கூறப்படுகிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்

போர்ட் ஆப்ஸ்பெயின், ஏப். 6

மேற்கிந்தியக் கோஷ்டிக்கும் இந்தியக் கோஷ்டிக்குமிடையே நடைபெறும் 4-வது கிரிக்கெட் டெஸ்டில், இந்தியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 61 ரன்கள் எடுத்தது. மேற்கிந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்ஸை, 9 விக்கெட் நஷ்டத்திற்கு 444 ரன்கள் எடுத்து முடித்துக்கொண்டது.

## இன்றுமுதல் அவசரகால நிலைமை ரத்தாகியது

### பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மீதான தடை வாபஸ்

கொழும்பு, சனி

★ ஒரு வருட காலமாக அமுலிலிருந்த அவசரகாலச் சட்ட விதிகள் பல இன்று முதல் ரத்துச் செய்யப்பட்டன.

★ பத்திரிகை மீதான தனிக்கையும் வாபுஸ் பெறப்பட்டது.

★ பொதுக் கூட்டத்திற்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

★ ஸ்தாபனங்கள் மீதானத டைகள் நீக்கப்பட்டன. (இதன் மூலம் தமிழரசுக் கட்சிமீதான தடை நீங்குகிறது.)

ஊர்வலங்கள், கூட்டங்கள், பிரசாரக் கட்டுப்பாடு, ஸ்தாபனத் தடைகள், துண்டுப் பிரசுர விநியோகம், வதந்திகள், தவறான அறிக்கைகளைப் பிரசுரித்தல் ஆகியவற்றுக்கான தடைகள் வாபஸ் பெறப்பட்டன.

354 தினங்களுக்கு முன், அதாவது 1961 ஏப்ரல் 17-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட அவசரகால விதிகள் நீக்கப்பட்டது பற்றி இன்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளது.

சோதனையிடுதல், கைதுசெய்தல், கைப்பற்றுதல், தடுப்புக் காவலில் வைத்தல், ஆகியவை சம்பந்தமான விதிகள் மட்டுமே இனி அமுலில் இருக்கும்.

## பிரிட்டிஷ் வான் வெளி கிரகம

லண்டன், ஏப்ரல் 6

அடுத்த வாரம் பிரிட்டனின் முதலாவது வான வெளிக் கிரகம் பரீட்சிக்கப்படவிருக்கிறது.

## நாகநாதன் அறிக்கை

கொழும்பு, சனி

தமிழரசுக் கட்சியின் காரியக் கமிட்டி வருகிற 26-ம் தேதி வியாழக்கிழமை திருக்கோணமலையில் கூடி புதிய நிலைமை பற்றிப் பரிசீலனை செய்யும் என, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நமது நிருபரிடம் கூறினர்.

ஆனல் அதற்கு முன் தமிழரசுக் கட்சியின் பார்லிமெண்டரிக் குழுவும், இதர தலைவர்களும் கூடி அவசியமான நடவடிக்கைகள்பற்றி ஆலோசனை செய்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்துக்கு வருகிற 17-ம் தேதி ஓராண்டு பூர்த்தியாவதால் அன்றைய தினம் பலவிடங்களில் தமிழரசுக் கட்சி சார்பாக பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும் எனவும் டாக்டர் நாகநாதன் அறிவித்தார்.

ஏப்ரல் 26-ம் தேதிக்குப் பின் கட்சி உத்தியோக ரீதியான அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 40 லட்சம் ரூபாய் வாதநோய் தடுப்பு மருந்து

### இறக்குமதி செய்ய சுகாதார இலாகா சிபார்சு

கொழும்பு, வெள்ளி

40 லட்சம் டோஸ் வாதநோய் தடுப்பு மருந்தை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யுமாறு சுகாதார இலாகா சுகாதார அமைச்சைக் கேட்டிருக்கிறது. மேற்குமாகாணத்தில் 3 வயதுக்கும் 15 வயதுக்கும் இடையிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இம்மருந்து உபயோகிக்கப்படும்.

ரஷ்யமருந்தின் விலை மலிவாய் இருப்பதாய் அதை இறக்குமதி செய்யவேண்டுமென சுகாதார இலாகா கேட்டுள்ளது. இதுபற்றி அரசாங்கம் விரைவில் ஒரு முடிவுசெய்யும்.

## பால் சபை

கொழும்பு, வெள்ளி

பால் சபை தினசரி 8000 பைண்ட் பாலை ஆஸ்பத்திரிகளிலும், பால் போஷாக்கு நிலையங்களிலும் விநியோகிக்கும் பொருட்டு சுகாதார இலாகாவுக்கு விற்கவிருக்கிறது. தற்போது சுகாதார இலாகா 5 லட்சம் ராத்தல் பால் பவுடரை இறக்குமதி செய்வதுடன், தினசரி 8000 பைண்ட் பாலையும் வாங்குகிறது. ஆஸ்பத்திரிகளிலும், பால் போஷாக்கு நிலையங்களிலும் பால் பவுடர் உபயோகிக்கப்படுவதை நிறுத்திவிடுவதென இலாகா தீர்மானித்துள்ளது.

## ராஷ்டிரபதி தேர்தல்

புதுடில்லி, ஏப்ரல் 6

ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி தேர்தலுக்கான திகதி இன்று அறிவிக்கப்பட்டது. ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதியின் பதவிக் காலம் மே 12-ம் தேதி முடிவடைகிறது.

ஏப்ரல் 11-ம் தேதிவரை அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யலாம். 18-ம் தேதி மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். அபேட்சை வாபஸ் பெறுவதற்கு ஏப்ரல் 21-ம் தேதி கடைசி நாளாகும்.

## பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

இளம்பிள்ளை வாதநோய் காரணமாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் மூடப்பட்டிருந்த பாடசாலைகள், வருகிற 10-ம் தேதிக்குமுன் மீண்டும் திறக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## "ஈழமாதாவின் பெயரால் மோசடி செய்யாதீர்"

### எதிரிக்கு மாஜிஸ்டிரேட் புத்திமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

1961-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி, காரை நகரைச் சேர்ந்த எம். யோகநாதன் என்பவருக்கு தமது ஸ்தாபனத்தில் குமாஸ்தா வேலை தருவதாகக் கூறி, 500 ரூபாய் டிப்பாசிட் பெற்றுக் கொண்டு அவரை வேண்டுமென்றே ஏமாற்றியதாய் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 41-ம் இலக்கத்திலுள்ள "ஈழமாதா பெனிவிட் கோப்பரேஷ"னைச்சேர்ந்த கந்தையா கிருஷ்ணபிள்ளை என்பவர் மீது ஏற்பட்ட வழக்கு மாஜிஸ்ட்ரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

லோகநாதனின் ரூ.500 ரொக்கப்பணத்தை மோசடி செய்ததாகவும் எதிரி மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

திரு. லோகநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- "500 ரூபாய் டிப்பாசிட்கட்டக் கூடிய குமாஸ்தா வேலை இருப்பதாக எதிரியின் விளம்பரம் ஒன்றை "வீரகேசரி" பத்திரிகையில் பார்த்தேன். 1961 செப்டம்பர் 30-ம் தேதி எதிரியின் காரியாலயத்துக்கு நான் சென்றேன். எதிரி மட்டும் அங்கு தனியாக உட்கார்ந்திருப்பதையும், வேறு எவரும் அங்கு இல்லாததையும் கண்டேன்"

மாஜிஸ்ட்ரேட்: "இது பாரதூரமான வழக்கு. நீர் இதை சமரசமாகத் தீர்த்துவையும்"

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாத் களுக்கும் நற்சாட்சிப் பத்திரங் களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்

### தேவை

கமத்தொழில், நிலம் பண்படுத்தல், தேகஉழைப்பு, கட்டடவேலை, மரவேலை, முதலியவற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஈடுபடத் தொழிலாளர் தேவை. பயிற்சிபெற்றவர்களும், பயிற்சியற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதிக் கேற்ப தகுந்த ஊதியம் கிடைக்கும். நிர்வாகி ஈழத் தொழில்சாண் நிலையம் தபாற்பெட்டி எண் 1174 கொழும்பு.

### விற்பனைக்கு

வில்லியர்ஸ் என்சின் இணைக்கப்பட்ட "கொன்கிறீட்" மிக்ஸர் இழுத்துச்செல்வதற்கு வேண்டிய வசதிகளுடன் கூடியது. ரூ. 1500 மாத்திரம். உடன் பெற்றுக்கொள்ளலாம். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 25-ந் திகதி. சனிக்கிழமை (7-4-62) ஹிஜ்ரி வருடம் 1381 ஜுல்கஃதா மாதம் 1-ம் பிறை.

இன்று திருதியை இரவு 7-57 வரை. பின்னர் சதுர்த்தி. பகல் 1-59 வரை பரணி. பின்னர் கார்த்திகை. மரணயோகம். கார்த்திகை விரதம். சௌபாக்கிய கௌரிவிரதம். இராகுகாலம் 9-07 முதல் 10-37 வரை.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

பரணி—கார்த்திகை: இன்று நீசர் தொடர்பு, வீண்செலவு, தெய்வவழிபாடு, பெரியோர் சந்திப்பு, தொழில்நலம் ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: நீசர்தலையீடு, நல்லோர்நட்பு, தொழில்ஊக்கம்.

இடபம்: தெய்வவழிபாடு, வாக்குவன்மை, கடன் தொல்லை.

மிதுனம்: அலைச்சல்,தொழில் விருத்தி, வாகனநட்டம்.

கடகம்: பிரயாணக்கஷ்டம், வாழ்வுநலம், குடும்பகஷ்டம்.

சிங்கம்: கடும் உழைப்பு, தொழில் செல்வாக்கு, நல்லோர்நட்பு.

கன்னி: ஆசாரக்கேடு,வாக்கு சாதுரியம், ஆடம்பரச்செலவு.

துலாம்: வாக்குவன்மை, கௌரவக்கேடு, மாதர்தொடர்பு.

விருச்சிகம்: நல்லோர் நட்பு, மனக்கவலை, புதுஉழைப்பு.

தனு: வைத்தியச்செலவு, போசனசுகம், பிரயாணக் கஷ்டம்.

மகரம்: கடன்பயம், பிரயாணநலம், இனசனஉதவி.

கும்பம்: வித்தியாலாபம், கடும்உழைப்பு, தேகநலக்கேடு.

மீனம்: மனோதைரியம், டும்பசுகம், நீசர்இடர்.

# ஆயுர்வேத வைத்தியத்துக்கு ஆஸ்பத்திரி சுவிப் நிதி

## சுகாதார அமைச்சரிடம் ஆயுர்வேதவைத்தியர்கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

தேசிய ஆஸ்பத்திரி சுவீப் மூலம் கிடைக்கும் பணம் முழுவதையும் ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திக்குச் செலவிடுமாறு அகில இலங்கை ஆயுர்வேத வைத்தியர்கள் காங்கிரஸின் தூதுகோஷ்டியொன்று சுகாதாரமந்திரி ஏ. பி. ஜயசூரியாவைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டது.

"சுகாதாரசேவை இலாகாவுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்துடன் சேர்ந்த பல்வேறு ஸ்தாபனங்கள் பொருளாதார உதவி புரிகின்றன. ஆஸ்பத்திரிகளுக்கு இலவசமாக உபகரணங்களும் மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் மருந்துகளும் கூடக் கிடைக்கின்றன. ஆயுர்வேத வைத்தியத்துக்கு வெளியிலிருந்து எந்தவிதமான உதவியும் கிடைப்பதில்லை. எனவே ஆஸ்பத்திரி சுவீப் மூலம் கிடைக்கும் நிதி முழுவதும் அரசாங்க ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் அபிவிருத்திக்கும் மாகாணங்களில் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளைத் திறப்பதற்கும் உபயோகிக்கப்பட வேண்டும்" என்று தூதுகோஷ்டி கேட்டுக் கொண்டது.

### மந்திரி அளித்த பதில்

தூதுகோஷ்டிக்கு சுகாதார மந்திரி திரு. ஜயசூரியா பதிலளிக்கையில், சமூகசேவை அலுவல்களை விஸ்தரிப்பதற்கு ஆஸ்பத்திரி சுவீப் நிதியிலிருந்து ஒரு பகுதி தரவேண்டுமென சமூகசேவை இலாகா கோரியுள்ளதென்றும் ஆஸ்பத்திரி சுவீப் நிதியிலிருந்து எவ்வளவு சத விகிதமான பணம் ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திக்கு ஒதுக்கலாமென்பது பற்றி அரசாங்கத்தின் அங்கீகாரத்தைத் தான் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஐந்துவருடத்திட்டன்தின்கீழ் 500ஆயுர்வேத மருந்துசாலைகள் திறக்கப்படுமென்று காலஞ்சென்ற பிரதமர் உறுதியளித்திருந்தாரென்றும் இதுவரை இத்திட்டம் அமுல் நடத்தப்படவில்லையென்றும் தூதுகோஷ்டியினர் சுகாதார மந்திரிக்குச் சுட்டிக்காட்டினர்.

ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு அவசியமான உதவிகள் அளிப்பதன் மூலம் ஆரம்பத்தில் 100 ஆயுர்வேத மருந்துச்சாலைகள் திறக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதார மந்திரி பதிலளித்தார். ஆயுர்வேத மருந்துச்சாலைகளைத் திறப்பதற்கு ஸ்தலஸ்தாபனசபைகளுக்கு உதவியளிப்பது அரசாங்கத்தின் கொள்கையென்றும் இக்கொள்கையை அரசாங்கம் அமுல் நடத்துமென்றும் மந்திரி ஜயசூரியா உறுதியளித்தார்.

ஆயுர்வேத வைத்திய மாணவர்களுக்குரிய கஷ்டங்கள்பற்றியும் ஆயுர்வேத வைத்தியர்களுக்குரிய கஷ்டங்கள்பற்றியும் தூதுகோஷ்டியினர் எடுத்துக் கூறினர். இவைகள்பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து ஆவன செய்வதாக மந்திரி தெரிவித்தார்.

---

## இளைஞன் தற்கொலை

குருநாகல், வெள்ளி

மானம் போகுமுன்னர் மரணம் கிட்டிவிட்டால் மேல் என்று நினைத்துக்கொண்டு டிக்கிரி அப்பு என்னும் 23 இளைஞன் தற்கொலை செய்து கொண்டான்.

மாதவலையைச் சேர்ந்த ஜே. என். டிக்கிரி அப்புவின் மரணம் பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. ஜோர்ஜ் ஜயசிங்கா விசாரணை நடாத்தியபோது, ஒரு போத்தல் கிருமிநாசினியை அருந்திக் கொண்டு டிக்கிரிஅப்பு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவந்தது.

சம்பவம் நடைபெற்ற முதல் தினம் டிக்கிரி அப்பு தமது வீட்டிலே ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து ஒரு சிறுமி மீது பலாத்காரம் உபயோகித்தாராம். சிறுமி கூச்சலிட்டதால் அயலவர்கள் அவரது வீட்டில் கூடிவிட்டார்கள். சமாச்சாரம் தமது வீட்டாருக்குத் தெரியுமுன்னரே அவமானம் தாங்க முடியாது டிக்கிரிஅப்பு தற்கொலை செய்து கொண்டாராம். இறந்து போனவரின் சகோதரிக்குச் சிறுமி முறைமிட்டாளாம்.

## சுகாதார இலாகா கிரிக்கட் கோஷ்டி

### இன்று யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு சுகாதார இலாகா கிரிக்கட் கோஷ்டி இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகின்றது. இம்மாதம் 7ம் 8ம் திகதிகளில் இரண்டு ஆட்டங்களில் இக்கோஷ்டி பங்குபற்றுகிறது.

வாரியர்ஸ் விளையாட்டுக் கழகத்துடனும் காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழகத்துடனும் கிரிக்கட் விளையாடுவார்கள்.

சுகாதார இலாகாக் கோஷ்டியில் கே. டி. பொன்னம்பலம் (காப்டன்), எஸ். ஜே. எம். சன் (உதவி காப்டன்), ஓ ஜி. அமரசிங்கா, டி. எஸ். டி.நாரங்கொட, ஐ. பார்தலொற், ஜி. டானியல், எம். ஹனிபா, ஓ ஜே. ஜெயவர்த்தனு, டபிள்யூ. விதானகமாகே, டாக்டர் டி. தம்பிநாயகம், என். சி. சாமுவேல், சி. ஈ. எஸ். அபயக்கோன், கே. பி, ஏ. சில்வா, ஏ. சிவநடராசா, ஐ. முருகாபிள்ளை, எல். பெர்னுண்டோ, ஐ. பி. ரூபேட், கே. கைலட்டர் ஆகியோர் வருகின்றனர்.

---

## புத்தகயா ஆலய அபிவிருத்தி

புத்தகயா, வெள்ளி

புத்தகாயா கோவில் ஆலோசக சபையின் 5-வது வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. மகாபோதி கோவிலின் அபிவிருத்தி வேலைகளுக்கு அங்கத்துவ நாடுகள் பண உதவி புரியவேண்டுமென இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்துக்கு இந்தியாவிலுள்ள இலங்கை ஹைக்கமிஷனர் சர். ரிச்சார்ட் அலுவிகாரை தலைமைதாங்கினர். அங்கத்துவ நாடுகள் 25-ல் பத்து இக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

கோவிலுக்கு வழங்கப்பட்டு வந்த நன்கொடைகள் தொகை குறைந்துள்ளதென்றும், அங்கத்துவநாடுகள் உதவி செய்தால்தான் அபிவிருத்தி வேலைகளைத தொடர்ந்து செய்யமுடியும் எனவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## விருப்பு வெறுப்பாகியுள்ளது

நிவந்தாம, வியாழன்

'பஸ் சேவை தேசியமயமாக்கப்பட்ட சமயத்தில் மிகுந்த ஆதரவு காட்டிவந்த மக்கள் இப்போது இந்த தேசிய சேவை மீது வெறுப்புக் காட்டத் தொடங்கியுள்ளார்கள்'.

இவ்வாறு தொழில் தேசியமய சேவை மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. யு. பி. வீரசேகரா நிவந்தாமவுக்கும் ஜாஎலைக்குமிடையிலான பஸ் சேவையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வீரசேகரா மேலும் பேசியதாவது:-

சுமார் 25 சத வீதமான அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்துக்கு மாறுனவர்கள். இவர்களது முக்கிய நோக்கம் அரசாங்கத்தின் அலுவல்களைத் தடைசெய்வதே. இதை மனத்திற்கொண்டு மக்களை அரசாங்கத்தின் மீது வெறுப்புக் கொள்ளச் செய்து அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிடுகிறார்கள்.

அரசாங்க சேவையில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் பொதுமக்களின் சேவையாளன் என்பதை உணர வேண்டும். இலங்கையில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தாம் பொதுமக்களை எஜமானர்கள் என எண்ணிவிடுகின்றனர். இதனுல் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு போதிய சலுகைகள் அளிக்கப்படுவதில்லை.

பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜெயசேனு பேசுகையில் போதிய தொழிற் பயிற்சி பெற்றவர்கள் இ. போ. சபையில் இல்லாததால் பஸ்கள் பழுது பார்ப்பதில் தாமதமேற்பட்டுவிடுகிறது என்ருர்.

---

## குண்டூர் பஸ் ஊழியர் மிரட்டல்

ஹைதராபாத், ஏப். 3

தங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் ஏப்ரல் 16-ந் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக குண்டூரிலுள்ள அரசாங்க பஸ் தொழிலாளர் யூனியன் அறிவித்துள்ளது.

---

## இடி, மின்னல் ஒருவர் பலி

கோட்டயம், ஏப். 5

நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் பலத்த இடி, மின்னல் தாக்கியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். மற்றும் ஒன்பதுபேர் காயமடைந்தனர்.





தலைமை ஸ்தாபனம்
பஸ்நிலையத்திற்கு வடக்கே யாழ்ப்பாணம்.

## சேமிப்புக் கணக்கில்

எவ்வளவு தொகையும் போடலாம், எடுக்கலாம், அவைகள் எல்லாம் பாஸ் புத்தகத்தில் பதியப்படும்.

**மாதம் மாதம் வட்டி கொடுக்கப்படும் அல்லது பாஸ் புத்தகத்தில் கூட்டப்படும்.**

## 6% வட்டி உண்டு

## தொடர்ந்து கட்டும் கணக்கு

### Recurring Deposit Account

மாதம் 10ரூபா வீதம் 78 மாதம் கட்டினுல் 1000 ரூபாவாக கொடுக்கப்படும், அதேபோல, 25×78=2500/-; 50×78= 5000/-; 100+78=10000/- சிக்கனம், சேமிப்பு முயற்சி வெற்றி வழி. நாளுக்கு நாள் தங்களது உழைப்பில் எவ்வளவு சிறிதாக இருந்தாலும்சரி ஓர் மிகச்சிறிய பாகத்தை மட்டும், சேமித்து ஓர் கணக்கில் 'றிசேவ்' பண்ணி வைத்தால் சிறிய காலத்தில் பெரிதாக வளர்ந்துவிடும். அது வாழ்க்கையின் அவசரதேவைக்கு எந்நேரமும் 'றிசேவ்' வாக உதவும்

## சிலோன் றிசேவ் லிமிட். சேமிப்பு வங்கி

1959-ம் ஆண்டு ஸ்தாபிதம், பஸ் நிலையத்திற்கு வடக்கே,
யாழ்ப்பாணம்.

# கென்யாவுக்கு தற்காலிக கலப்பு அரசாங்கம்

## 'காடு', 'கனு' கட்சிகள் இணக்கம்

லண்டன், ஏப். 6

கென்யாவுக்கு சுதந்திரம் அளிப்பது சம்பந்தமாக புதிய அரசியல் திட்டம் பற்றி கென்யாவின் இரு பிரதான அரசியல் கட்சிகளான 'காடு' கட்சிக்கும் 'கனு' கட்சிக்குமிடையிலிருந்துவந்த கருத்து வேற்றுமை ஓரளவுக்கு நீங்கி விட்டதாதவும் இரு கட்சிகளும் தற்காலிக கலப்பு அரசாங்கம் அமைக்க இணங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பொதுத்தேர்தல் நடைபெறும் வரை கலப்பு அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்.

கென்யா கலப்பு அரசாங்கம் பற்றி இன்று விரிவான முறையில் பேச்சு வார்த்தை நடைபெறும்.

இதற்கிடையில் கலப்பு அரசாங்கத்தில் ஐரோப்பிய பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டுமென்று கென்யா கவர்னர் தெரிவித்துள்ளார்.

# மேற்கு இரியான் விவகாரம்: யு தாண்ட் யோசனை

## டச்சு அரசாங்கம் பரிசீலனை

நியூயோர்க், ஏப். 6

மேற்கு இரியான் விவகாரம் சம்பந்தமாக இந்தோனேஷியாவுக்கும் டச்சு அரசாங்கத்துக்குமுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணு முகமாக ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யு'தாண்ட் தெரிவித்த ஒரு யோசனையை டச்சு அரசாங்கம் இவ்வார இறுதியில் பரிசீலனை செய்யும் என்று கூறப்படுகிறது.

யு'தாண்ட்டின் இந்த யோசனையை டச் அரசியல் வட்டாரங்கள் எதிர்க்கவோ, வரவேற்கவோ இல்லை.

மேற்கு இரியானை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இரண்டு வருடகாலத்துக்கு தனது நிர்வாகத்தில் வைத்திருக்க வேண்டுமென்பது தான் ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யு'தாண்ட் தெரிவித்த யோசனையாகும்.

இந்த யோசனையின் படி இரண்டுவருட காலத்துக்குள்ளும் மேற்கு இரியானிலிருந்துடச்சுத்துருப்புக்களும்அதிகாரிகளும் படிப்படியாக வாபஸ்பெறப் படுவர். இந்தோனேஷிய துருப்புக்களும் சிவில் அதிகாரிகளும் அங்கு சென்று பொறுப்பேற்பர்.

இரண்டுவருட முடிவில் மேற்கு இரியானில் பொது ஜனவாக்குக் கணிப்பு நடைபெறும்.

இந்த யோசனையை இந்தோனேஷியாவும் அமெரிக்காவும் ஆதரித்துள்ளன.

## அணு ஆயுத பரீட்சை

### பிரான்ஸ் திட்டம்

பாரிஸ், ஏப். 5

சகாரா பாலைவனத்தில்புதிய அணு ஆயுத சோதனை நடத்த பிரஞ்சு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இச்செய்தி பற்றி உத்தியோக பூர்வமான அறிக்கையெதுவும் வெளியாகவில்லை.

சமீபத்தில் அல்ஜீரிய தலைவர்களுடன் பிரஞ்சு அரசாங்கம் கையொப்பமிட்ட உடன்படிக்கையில் அடுத்த ஐந்து வருட காலத்துக்கு சகாராவில் அணு ஆயுத சோதனை நடத்தும் உரிமையை பிரான்ஸ் பெற்றுக்கொண்டது.

## 25–வது அணுகுண்டு

### அமெரிக்கா பரீட்சித்தது

வாஷங்டன், ஏப். 6

நிலத்துக்கடியில் அணுஆயுத பரிசோதனை நடத்தும் அமெரிக்காவின் திட்டத்தின்படி இப்பரீட்ஷைத் தொடரில் நேற்று 25-வது அணுஆயுதம் ஒன்று நெவாடாவில் பரீட்சிக்கப்பட்டது. இது குறைந்த சக்தி வாய்ந்ததென்று அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்துள்ளது.

## சிங்கப்பூர் பிரதமர் சுற்றுப்பிரயாணம்

கோலாலம்பூர், ஏப். 6

சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்லீ இந்தியா, ஐக்கிய அரபுக்குடியரசு, பர்மா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இம்மாதம் 20-ந் திகதி அவர் தமது பிரயாணத்தை ஆரம்பிப்பார்.

## வீதி அமைப்புக்கு 5 கோடி ரூபாய்

கல்கத்தா, ஏப். 6

மேற்கு வங்காளத்தில் வீதி அமைப்புக்கென ஐந்து கோடி ரூபாய் செலவிடப்படும் பாலங்கள் உட்பட 3900 மைல் நீளமான சாலைகள் அமைக்கப்படும்.

## தமிழ் ஆட்சிமொழி

### மேலும் 2 துறைகளில் செயலாக்கப்படும்

சென்னை, ஏப். 5.

கால்நடை மருத்துவத்துறையின் கால்நடை மருத்துவமனைகள் மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிலும் சிர்திருத்தப் பள்ளிகள் எச்சரிக்கைப் பணித்துறையின் சில அலுவலகங்களிலும் இம்மாதம் 14-ந் திகதி முதல் தமிழ் ஆட்சிமொழியாகச் செயலாக்கப்படும். இவ்வாறு அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

## மைசூரின் வரிவிதிப்புக்கள்

பங்களூர், ஏப். 5

திட்ட இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு அடுத்த மூன்றரை வருஷங்களில் மைசூர் அரசாங்கம் புதுவரிகள் மூலம் 35 கோடி ரூபாய் திரட்ட வேண்டியிருக்கும் என்று முதல் மந்திரி திரு. எஸ். ஆர். கன்டி சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்

## சக்ளா

புதுடில்லி, ஏப்ரல் 5

அமெரிக்காவில் இந்திய ஸ்தானிகராக திரு. எம். சி. சக்ளா நியமிக்கப்பட்டுள்ளார்.

## ராஜிநாமா

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவு வங்கியின் மனேஜர் திரு. சி. சத்திய மூர்த்தி ராஜிநாமா செய்துள்ளார்.

# படைகுறைப்பு மகாநாட்டில் கருத்துவேற்றுமை

## மேற்கு நாடுகள்மீது ஸோரின் குற்றச்சாட்டு

ஜெனிவா, ஏப். 6

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாட்டில் கருத்து வேற்றுமை பெருமளவில் ஏற்பட்டுவிட்டதாக மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள சோவியத் உதவி வெளி விவகார மந்திரி திரு. ஸோரின் நேற்றுத் தெரிவித்தார்.

படைகுறைப்பு மகாநாட்டின் முக்கிய நோக்கத்தையே மேற்கு நாடுகள் தட்டிக்கழிப்பதாக திரு. ஸோரின் மேற்கு நாடுகள் மீது குற்றம் சாட்டினார்.

மகாநாட்டின் நேற்றைய கூட்டத்தில் சோவியத் பிரதிநிதிக்கும் பிரிட்டிஷ் பிரதிநிதிக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

யுத்தப் பிரசாரத்தை தடை செய்வது பற்றி மகாநாட்டின் நேற்றைய கூட்டம் விவாதித்தது.

இந்த விவாதம் திங்கட்கிழமை மீண்டும் தொடர்ந்து நடைபெறும்.

அணு ஆயுத பரீட்சைத் தடை ஒப்பந்தம் சம்பந்தமாக மூவல்லரசுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு மூவல்லரசுகளின் பிரதிநிதிகளும் முயற்சி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

## பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம்

வாஷிங்டன், ஏப்ரல் 6

ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் தென் வியட்நாமில் பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

## பிரஜாசோஷலிஸ்ட்—சோஷலிஸ்ட்இணையும்

புதுடில்லி, ஏப்ரல் 6

இந்திய சோஷலிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு இந்திய பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாக சபை நேற்று விருப்பம் தெரிவித்தது.

இந்த இணைப்பு வெறும் அரசியல் தந்திரமாக இருக்காது என்றுகட்சியின் நிர்வாகசபை கருத்து வெளியிட்டது.

## பாரிசில் சுவன்னபூமா

பாரிஸ், ஏப்ரல் 6

லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்ன பூமா பாரிஸ் வந்து சேர்ந்துள்ளார். லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கான இறுதி முயற்சிகளும் முடிவடைந்து கலப்பு அரசாங்கம் அமையும்வரை அவர் பாரிசில் தங்கியிருக்க உத்தேசித்துள்ளாராம்.

# குற்றவாளிகளைத் திருத்த பயிற்சியளிக்கும் கலாசாலை

## டோக்கியோவில் நிறுவப்பட்டது

டோக்கியோ, ஏப். 6

ஆசியாவில் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைத் திருத்தவும் நடைபெறும் சர்வதேச ஆராய்ச்சிக்குஊக்கமளிக்கும்வகையில் டோக்கியோவிலுள்ள 'வோக்கு' என்ற சிறிய நகரில் கலாசாலையொன்று தொடங்கப்பட்டுள்ளது.

குற்றத்தைத் தடுப்பது பற்றிய அறிவில் நிபுணத்துவம் பெறவும்,இத்துறையில் பொது அறிவைப்பெற விரும்புவோர் இதற்கென "வோக்கு" நகர் சிறைச்சாலை மூன்று மாடிக்கட்டடத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கான இந்தத் தலைமைப்பீடத்தில் பயிற்சி பெற்றுக்கொள்ள முடியும்.

உதவி டைரக்டரான இலங்கையைச் சேர்ந்த திரு. வி. என். பிள்ளை தெரிவித்திருப்பதாவது:—

இந்தஆண்டில் 18ஜப்பானியர் தமது பயிற்சியை இங்கு ஆரம்பித்தனர். ஆசிரியர்களுக்கான பூரண வகுப்பொன்று செப்டம்பர் மாதம் அல்லது ஒக்டோபர் மாதத்தில் தொடங்குமென எதிர்பார்க்கிறேன். இப் பயிற்சிக் கலாசாலை மார்ச் 15-ல் ஆரம்பிக்கப்பட்டது.

குற்றத்தைத் தடுக்கவும், குற்றவாளிகளைத் திருத்தவும், பயிற்சியளிப்பது; இத் துறையிற் பல அராய்ச்சிகளை நடத்துவது, சமூகத்தைக் காப்பாற்றும் வகையில் அரசாங்கங்களுக்கு உதவியளிப்பது ஆகியவை இக் சலாசாலையின் முக்குகிய நோக்கமாம்.

சென்னை, ஏப்ரல்5

தமிழ் நாட்டில் வைத்திய முறை போதனை கல்லூரி ஒன்று அமைக்கப்படவிருப்பதாய் சுகாதார மந்திரி ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் தெரிவித்தார்.

# சாம்ராஜ்ய கண்காட்சியில் இலங்கை ஓவியர்

லண்டன், ஏப். 5

அண்மையில் திறந்துவைக்கப்பட்ட சாம்ராஜ்ய வாலிப ஓவியக் கலைஞர்களின் நான்காவது வருடாந்தக் கண்காட்சியில் தங்கள் வர்ண ஓவியங்களையும், சித்திரவேலைப்பாடுகளையும் காண்பிக்கும் 16 சாம்ராஜ்ய நாடுகளிலிருந்துவந்த 43 ஓவியர்களுள் இலங்கை ஓவியரான திரு. திஸா ரணசிங்காவும் ஒருவராவார்.

34 வயதுடைய ரணசிங்கா லண்டன் அரச ஓவியக்கலைக் கல்லூரியின் வெண்கலப் படலம் உருக்குவதுபற்றிப் படிக்கிறார். முதல் இவர் ஸெல்ஸி ஓவியப் பாடசாலையில் 1954–ம் ஆண்டுமுதல் 1958-ம் ஆண்டு வரை படித்தார். அடுத்த வருடம் யு. ..ன். எஸ். கோ. பிரயாண வசதிப் பரிசைப் பெற்றார்.

திரு. ரணசிங்கா செப்டம்பரில் தன் தாயகத்திற்குத் திரும்புமுன் புரோன்ஸ் உருக்குச் சித்திரம் தன் தேசத்தில் மறைந்து மடிந்ததைப் பற்றிப் படிக்க பிரிட்டனுக்குச் செல்ல தீர்மானித்துள்ளார்.

"ஒரு சிற்பத்துக்கு அமைப்பை ஏற்படுத்தி உருக்குவதில் தான் முக்கிய வேலை. ஆனல் தாயகத்திற்குத் திரும்பிய போது இவ்வேலையைச் செய்வதற்கு ஒருவருமில்லை என அறிந்தேன். நான் ஒரு சிற்பியாக எனது வாழ்வைத்தொடர்ந்து நடத்த எண்ணியுள்ளேன்" என்றார்.

### செய்முறை

திரு. ரணசிங்க 'சிவா' என்று பதிக்கப்பட்ட வெண்கலத்தைக் காட்டுகிறார்.எனது வேலையைப் பிரித்துப் பிரித்து விளக்கம்கூறுவிட்டாலும் நான் ஒரு சிறந்த சிற்பியல்ல. சிற்ப வேலையில் மிக முக்கியமானதையேபடிக்க முயற்சிக்கிறேன்.

"சில விசேஷ சிற்பத்தைத் தேடி அதைச் செய்வதில்தான் முழு ஆர்வத்தையும் பதிப்பேன், இச் சிற்பவேலை ஒரு மனித உருவமானல் அதை நாடகத்திற்குச் சோடிப்பது போல் அலங்கரிக்காமல் நான செய்யும் உருவச்சிலையின் முக பாவத்தை தெரியக்கூடியஎண்ணம் அமைக்கவே தெண்டிப்பேன். 'எனக்கு இந்துக் கடவுளை அமைப்பதில் அதிக ஆர்வமுண்டு. இவைஎனக்குஅதிக கருத்தை அமைக்கின்றது. நான் புத்த சிலையிலும் ஆராய்ச்சி வேலை நடத்தியபோது இவற்றைக் கண்டேன்" என்று கூறினார்.

திரு. ரணசிங்க கொழும்பில் வெண்கலம் உருக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவிச் சிறு வேலைகளைச் செய்ய எண்ணியுள்ளார்.

## கென்னடிக்கு தாய்மார் கடிதம்

ஜெனிவா, ஏப்ரல் 6

ஜெனிவாவிலுள்ள நூற்றுக்கதிகமான தாய்மார்கள் அமெரிக்க ஜனதிபதிக்குகென்னடிக்குஅனுப்பியுள்ள ஒரு கடிததத்தில் அமெரிக்காவின் உத்தேச அணுஆயுத பரிசோதனைத்திட்டத்தைக் கைவிடுமாறு கோரியுள்ளனர்.

## அங்கோலா சுதந்திர அரசாங்கம்

லயப்போவிலி, ஏப்ரல் 5

அங்கோலா சுதந்திர அரசாங்கம் ஒன்று லியப்போல்ட் வில்லியில் அமைக்கப்பட்டுள்ளது.




வல்வெட்டித்துறை

முத்துமாரி அம்மன் கோவிலில்

சென்னை

திருமுருக கிருபானந்தவாரியார்

அவர்களின் தம்பி

திருமாமணிசிவம் அவர்களால்

பங்குனி 25ம் திகதி சனிக்கிழமை (7-4-62)

தொடங்கி மாலை 6-30 மணிக்கு தினசரி எட்டு நாட்களுக்கு சிறந்த பக்கவாத்தியங்களுடன் கதாப்பிரசங்கம் நடைபெறும். அன்பர்கள் யாவரும் பிரசங்கத்தைக் கேட்டுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

வல்வை வாசிகள்.

## மணி வாக்கு

"ஆழ்ந்த சிந்தனையின் இயற்கையானமுடிவுதான் ஆடம்பரமற்ற எளிய சுபாவம்."

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 25 உ (7-4-62)

## வரிப் பளுவுகள்

இலங்கையில் வரிப்பளுவுகள் தாங்க முடியாமல், தண்டிக்குமளவுக்கு உயர்ந்திருப்பதாக இலங்கை தேசிய வர்த்தகர்சபைத் தலைவர் ஆறுவது வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் புகார் செய்துள்ளார். வரிப்பளுவுகள் ஒருபுறமிருக்க இனி என்னென்ன புதியபுதிய தடைகள் ஏற்படுமோ என்று தனிப்பட்ட வர்த்தகத் தொழிலாளர் நம்பிக்கையின்றி அஞ்சி வாழுவதாயும் இதனால் தனிப்பட்டவர்கள் புதிய கைத்தொழில்களில் பூரண உற்சாகத்துடன் ஈடுபட முடியாமலிருப்பதாயும் குறிப்பிட்டார்.

அரசாங்க நிதிநிலைமையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மக்கள்மீது மேலும் புதிய வரிகள் விதிக்கப்படலாமென்று எட்டியாந்தோட்டையில் பேசுகையில் டாக்டர் என். எம். பெரேரா எச்சரிக்கை செய்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து சென்ற ஆண்டில் ரூபா 10 கோடிக்குமேல் உதவியை எதிர்பார்த்திருக்கையில், உண்மையில் 2 கோடி 96 லட்சம் தான் உதவி கிடைத்துள்ளதாயும் மத்தியவங்கி அறிக்கை தெரிவிக்கின்றது. இவற்றை எல்லாம் பார்க்கையில், அடுத்துவரும் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் அதிகமான வரிகள் விதிக்கப்படுமோ என்று வர்த்தகர், கைத்தொழிலாளர் உள்ளிட்டு பொதுமக்கள் பலரும் அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

நடப்பு வருடத்தில் தேசிய அபிவிருத்தி வரியை பெரிய குடும்பப் பொறுப்புள்ளவர்களுக்கும் கண்ணைமூடிக்கொண்டு விதித்தால் பலர் மனக்கசப்படைந்துள்ளனர். வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துள்ள நிலையில் புதிய வரிப்பளுவுகளும் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மக்கள் நிலை என்ன ஆகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

தர்மத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்ட இந்தியப் பிரதமர் நேருஜியும், சமீபத்தில் இந்திய வர்த்தகர் சங்கத்தில் பேசுகையில், நாட்டின் கைத்தொழில் பொருளாதார அபிவிருத்திக்கு தனியார்களது உதவி மிக அவசியமென்று ஒப்புக் கொண்டு அதை வரவேற்றார். அதிகமானவரிகளை தாங்க முடியாத அளவுக்கு விதிப்பதுடன், பல பல தடைகளையும் ஏற்படுத்துவதாயின், தனியார்கள், புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க முன்வரமாட்டார்கள். இதனால் நாட்டின் அபிவிருத்தியும் தடைபடக் கூடும். இந்தியாவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் அமுலுக்குக் கொண்டுவந்தும், தேசிய அபிவிருத்தி வரி எதுவும் விதிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

வருகிற வரவுசெலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட, செலவினங்களை வெகுவாகக் குறைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. செலவில் கூடுமான சிக்கனம் செய்வது பெரிதும் வரவேற்கத்தக்கது.

வெளிநாட்டு உதவிகள் இந்தியாவுக்கு அமோகமாகக் கிடைக்கையில், இலங்கைக்கு அது வெகுவாகக் கிடைக்காமற் போவானேன்? இருநாடுகளும் நடுநிலைமைக் கொள்கையையே கைக்கொண்டும், ஏன் இலங்கைக்கு மட்டும் வெளி உதவிகள் போதிய அளவு கிடைக்க முடியவில்லை?

புதிய வரிகளை விதிக்க முற்படுமுன், அரசாங்கம், இந்த விஷயங்களைப்பற்றி நன்கு ஆராய்ந்து, பல கட்சியினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடிப் பெற வேண்டும். இங்கு பொருளாதார அபிவிருத்தி ஏற்படவும், மக்கள் சுபிட்சமாக முன்னேறவும் இது அவசியமாகும்.

## வைத்திய நிபுணர்கள் இலங்கை விஜயம்

கொழும்பு, வெள்ளி

நாட்டில் பரவி வரும் நீரிழிவு நோயைத் தடுப்பதில் சுகாதார இலாகாவுக்குத் துணை புரிவதற்கென வைத்திய நிபுணர்கள் கோஷ்டியொன்றை உலக சுகாதார ஸ்தாபனம் இங்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளது.

தற்சமயம் இலங்கையில் சுமார் 220,000 பேர் நீரிழிவு நோய்க்குள்ளாகியிருக்கிறார்கள். 35 வயதுக்கும் 55 வயதுக்குமிடைப்பட்டவர்களே பெரும்பாலும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனம் அனுப்பி வைக்கும் நிபுணர்கள் கோஷ்டி, இங்குள்ளவர்கள் உண்ணும் உணவுகள், வாழ்க்கை நிலைமைகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து, நீரிழிவு நோய் பரவுவதற்கான காரணங்களையும் அறிய முயலும். நீரிழிவு நோயாளிகளுக்கான சிகிச்சை நிலையங்களுக்கும் இவர்கள் சென்று பார்வையிட்டு அறிக்கை ஒன்று தயாரிப்பர். நோயைத் தடுப்பதில் இலங்கைக்கு எத்தகைய உதவி புரியலாம் என்பது பற்றித் தமது ஆலோசனைகளையும் இந்த அறிக்கையில் குறிப்பிடுவர். உலக சுகாதாரஸ்தாபனத்தின் புதுடில்லித் தலைமைக் காரியாலயத்தில் இந்த அறிக்கைசமர்ப்பிக்கப்படும்.

## மன்னாரில் சிங்களப்பாடசாலை

### மன்னார் எம். பி. பாராட்டு

மன்னார், வெள்ளி

"நான் எச்சமயத்தையும் எவரையும் எதிர்ப்பவனல்ல. அவரவர் மதத்தையும் பின்பற்ற எவருக்கும் சுதந்திரம் உண்டு."

இவ்வாறு மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் மன்னார் பௌத்த இளைஞர் சங்கக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

சிங்களப் பிள்ளைகளுக்காக மன்னாரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்களப்பாடசாலையைக் குறிப்பிட்டு தாம் அதை அமைப்பதற்கு முழு ஆதரவும் கொடுத்தாகவும், ஒவ்வொருவருக்கும் தமது தாய்ப்பாஷையைக் கற்க சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கவனிப்பாரற்றுக் கிடந்த விகாரையை புனருத்தாரணம் செய்த பௌத்த சங்கத்தினரை மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் பாராட்டிப்பேசினார்.

அனுராதபுரம் இராஜவிகாரை பிரதம பிக்கு பேசுகையில், முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர், ஆகியோர் தோளோடு தோள் சேர்ந்து ஒற்றுமையாக சமூக சேவைகள் செய்யின் இந்நாட்டில் வகுப்புக்கலகம், இனக்கலவரம் ஏற்படமுடியாது.எனக் குறிப்பிட்டார்.

பாடசாலை வித்தியாதரிசி திரு. எஸ். நவரத்தினமும் பேசினார்.

# வசதிக் கட்டணம் அவசியமில்லை

## கல்விக் கமிஷன் சிபார்சு

கொழும்பு, வெள்ளி

'இன்றைய நிதி நிலைமையில் பள்ளிக்கூடங்களைக் கொண்டு நடாத்துவதற்கு மாணவர்களிடமிருந்து வசதிக்கட்டணம் பெற வேண்டியது அவசியமாகின்றது'.

தேசிய கல்விக் கமிஷன் இவ்வாறு அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது.

வசதிக் கட்டணம் செலுத்தக் கூடிய மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் எனவும், ஆனால் எவரிடமிருந்தும் பலாத்காரமாக கட்டணம் வசூலிக்கப்படக்கூடாதென்றும் கமிஷன் தீர்மானித்துள்ளது.

வசதிக்கட்டணம் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பள்ளிக்கூடங்களைக் கமிஷன் மூன்று வகைகளாகத் தரம் பிரித்துள்ளது. ஆரம்ப பாடசாலையிலுள்ளவர்கள் ஒரு ரூபாவையும், கனிஷ்ட பாடசாலை மாணவர்கள் 2 ரூபாவையும், சிரேஷ்டபாடசாலை மாணவர்கள் 3 ரூபாவையும் வசதிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் எனக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

தற்போதைய நிதி நிலைமைகளில், பள்ளிக்கூடங்களின் பொறுப்பு அரசாங்கத்துக்குப் பெரும் பாரமாக இருப்பதாகக் கமிஷன் கூறியுள்ளது. வருடமொன்றுக்கு மாணவர்களுக்குத் தலா 160 ரூபாய் வரை அரசாங்கம் செலவு செய்துள்ளதாகவும், மாணவர்கள் சிறு தொகையேனும் கட்டணம் செலுத்துவது நல்லதென்றும் மேலும் கமிஷன் கூறியுள்ளது.

கமிஷனின் அங்கத்தவர்கள் மூவர் இதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள். அரசாங்கம் இலவச கல்வி வழங்குவதாகவிருந்தால் எதுவித கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது என அவர்கள் தமது ஆட்சேபனைக்குக் காரணம் கூறியுள்ளார்கள்.

திரு. எல். எச். மெத்தானந்தா, திரு. டி.யு. டி. சில்வா, திரு.சி.டபிள்யுடபிள்யு.கன்னங்கரா ஆகிய மூவருமே கமிஷன் சிபார்சுக்கு ஆட்சேபனை தெரிவித்தவர்கள.

இரத்தினக் கம்பளம்

## விடுமுறை நாட்களில்...

பதுமன்

"இப்படியான ஒரு கடிதா எழுதுவதற்கு ஒரு புறம் வருத்தமாகவும், மறுபுறம் வெட்கமாகவும் இருக்கின்றது...."என்ற பீடிகையுடன் பதுமனுக்கு ஒரு கடிதம் வந்தது.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற் பயிலும் மாணவன் ஒருவரின் கடிதம் இது. இப்போது பல்கலைக்கழகத்துக்கு மூன்று மாதகால விடுமுறையெனவும் இந்தக் காலத்தில் ஏதாவது ஒரு வேலை செய்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டுமெனவும் அதிற் கண்டிருந்தது. இந்த மாதிரி விடுமுறை நாட்களை உபயோகித்துப் பணம் தேடுவதில் மாணவர்கள் பலருக்கு ஆர்வம் இருக்கின்றது. ஆனால் இலங்கையில் இத்தகைய வாய்ப்புக்கள் மிகக் குறைவு.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் கல்வி பயிலும் மாணவர்கள் ஓய்வு நேரத்தில் வர்த்தக நிலையங்களிலும், ஹோட்டல்களிலும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் வேலை செய்து பணம் சம்பாதிக்கின்றனர். பட்டதாரிகளும் இத்தகைய வேலைகள் செய்வதுண்டு. சில மாணவர்கள் சப்பாத்துத் துடைத்து, மைதீட்டிக் கைநிறையப் பணம் சேகரித்து வருகின்றார்கள். இப்படிக் கிடைக்கும் தொகை அவர்களின் நாளாந்தச் செலவுக்கு மாத்திரமன்றி உடுபுடவைக்கும் கண்டு மிஞ்சுகின்றதாம்.

உலகம்சுற்றும் தமிழ்ப் பேரறிஞரான தனிநாயக அடிகளார் இம்மாதிரி மாணவர்கள் ஐரோப்பியநாடுகளில் உழைப்பதைப்பற்றிப் பலசந்தர்ப்பங்களிற் கூறியிருக்கின்றார்.

இங்குள்ள மாணவர்களில் அநேகர் மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதுண்டு. அவ்வாறே அங்குள்ள இளைஞர்கள் பிழைக்கும் நல்ல வழிகளையும் இங்கு பின்பற்றலாம்.

கிளிநொச்சிப்பகுதியில் இப்போது வயல்நிலங்களிற்போதியளவு வேலைகள் உண்டு. மாணவர்கள் தமது விடுமுறைகாலத்தில் அங்குசென்று வயல்வேலை செய்து பணம் சேகரிக்கலாம். பல்கலைக்கழக மாணவர்கள் இத்துறையில் முயற்சிப்பார்களானால் ஏனையோருக்கும் அது ஒரு முன்மாதிரியாக இருக்கும் அல்லவா?

### தனிநாயக அடிகளார்

இதனை எழுதிக்கொண்டிருக்கும்போது இங்கு விடுமுறையைக் கழிப்பதற்காக மலாயாவிலிருந்து வந்துள்ள தனிநாயக அடிகளார் அங்குள்ள மாணவர்கள் தமிழை மிக ஆர்வத்துடன் பயின்றுவருவதாகக் கூறிய செய்தி மகிழ்ச்சி ஊட்டுவதாகும். மலாயா பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகப் பணியாற்றும்அடிகளார், தென்கிழக்காசியாவில் இன்றும் தமிழ்க் கலைகள் அனைத்தும் வளர்ந்து வருகின்றனவென்று இளவாலை சென்.ஹென்றி கல்லூரியிற் பேசும்போது தெரிவித்தார். கம்போடியா, தாய்லந்து, சுமத்திரா ஆகிய நாடுகளில் திருவெம்பாவை போன்ற தமிழர் விழாக்கள் கொண்டாடப் படுகின்றனவென்றும் அடிகளார் கூறினர்.

### மீனாட்சிசுந்தரனார்

அமெரிக்காவில் சிக்காகோ நகரத்திலே அன்று சுவாமி விவேகானந்தர் இந்துமதத்தின் சிறப்பையும், பாரதநாட்டின் கலாசாரத்தையும் எடுத்துரைத்து இந்தியாவின் புகழை உலகறியச்செய்தார்.

இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றும் பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தமிழ்பரப்பும் தூதுவராக அமெரிக்கா சென்றுள்ளார். அங்குசிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப்பகுதியை அவர் ஆரம்பித்துவைத்து தமிழ் இலக்கிய வரலாறுபற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றுவார். தமிழகத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அமெரிக்கா சென்று தமிழ்முழக்கம் செய்வது தமிழ் மக்களுக்கே பெருமை தருவதாகும். அவர் மூன்றுமாதகாலம் அமெரிக்காவில் தங்கி அங்கெல்லாம் தமிழ் பரப்புவார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் முனிவர் திரு. வி. க. கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைத் தமிழ்ச்சங்க இலக்கிய விழாவில், பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனாரை திரு. வி. க. "பெண்மை போற்றும் தமிழ்நாட்டு விவேகானந்தன்" என வாழ்த்தினர். அவர் அன்று கூறியது இன்று மெய்யாகிவிட்டது.

தமிழ் வாழ்க!

## ஜயாறன் எழுதுவது

காலையில் எழுந்ததும் ஒரு மகிழ்ச்சியான சேதியைக் கேட்டோம். அவசரகாலத்தை அரசாங்கம் நீடிக்கவில்லையாம். பத்திரிகைத்தணிக்கை, தமிழரசுக்கட்சி மீதிருந்த தடை எல்லாம் நீங்குகின்றன. ராணுவம் கூட வெகுவாக இங்கிருந்து காலி செய்வதாகக் கேள்விப்பட்டேன். அப்பாடி!

ஒரு வருஷ காலமாக நீடித்துவந்த இந்த அவசரகாலத்தைப்பற்றி எவ்வளவோஎழுத என் பேனா உந்துகிறது. அன்று பிப்ரவரி மாதம் 17-ந் திகதி இரவு 1 மணிக்கு நண்பருடன் காரில் கச்சேரிக்குச் சென்றபோது, துப்பாக்கி வீரர்கள் பல இடங்களில் தடுத்தார்கள். "பிரஸ், பிரஸ்" (பத்திரிகை) என்று சொல்லிக் கொண்டே அவர்களைத் தாண்டிச் சென்றோம். எங்களை அவர்கள் அனுமதித்ததுதான் ஆச்சரியம். பின் ஒரு காரும் அனுமதிக்கப்படவில்லையாம். நாங்கள் அடிபடாமல் தப்பியது தெய்வாதீனமென்றார் ஓர் அன்பர்.

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலையாயினர். பார்லிமெண்ட் சபையிலிருந்த கே. எம். பி. வெளியே இருக்கிறார். (உபதேர்தலில் உள்ளே மீண்டும் வரக்கூடும்) வேறு பலர், இப்போது காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். காலச்சக்கரம் வேகமாகச் சுழல்கின்றது. இந்தச் சுழற்சியில்தான் எவ்வளவு விதவிதமான மாறுதல்கள்! இன்னும் என்னென்ன மாறுதல்கள் ஏற்படப்போகின்றனவோ! எல்லாம் அவன் செயல்.

* * *

ஏப்ரல் மாதம் 6-ந் திகதியை நம்மில் பலரும் மறக்க முடியாது. சரியாக இருபது வருடங்களுக்கு முன் இதே தினத்தில்தான் ஜப்பானிய விமானங்கள் படைபடையாக வந்து கொழும்பிலும், திருக்கோணமலையிலும் குண்டு வீசி பல கப்பல்களைக் கவிழ்த்தன. பலர் மாண்டனர்.

அன்று காலை கொழும்பில் தான் இருந்தேன். அபாயச் சங்கு ஊதியது. ஆகாயத்தைப் பார்த்தேன். தூரத்திலே ஏதோ பறவைக் கூட்டங்கள் வருவது போலிருந்தது. பின்னர் 'படபட' வென்று வெடிகள் கேட்டன. குண்டுகள் வெடித்தன. நாங்கள் இருந்த வீட்டின் மீது குண்டின் ஒரு சின்னப் பகுதி விழுந்து ஓடு நொறுங்கியது.

எமனே வந்துவிட்டதாகத் தான் நினைத்தோம். இவ்வித சமயங்களில், நாம் என்ன செய்யவேண்டுமென்று மகாத்மாகாந்தி கூறியிருந்தார். ராமஜபம் செய்யுமாறு அவர் கூறியபடி, 'ராம ராம' என்று மேசைக் கடியில் பதுங்கிக் கொண்டு கூறினோம். அரை மணி நேரம் இந்த வேதனை. முடிவில் அபாயம் நீங்கியதாகக் சங்கு ஊதவே வெளி வந்து பெருமூச்சுவிட்டோம்.

அன்றே ஊரெல்லாம் காலி. அப்போது தான் எனக்கு அங்கு நல்ல வீடொன்று கிடைக்க முடிந்தது!

ஜப்பான் போட்ட குண்டு பலருக்குத் தங்கக் குண்டாயிற்று. பல சிப்பந்திகள் முதலாளிகளாக மாறினர்! நமக்கெல்லாம் பின்னர் விடுதலையும் கிடைத்தது. காலச் சக்கரச் சுழற்சியில் தான் எவ்வளவு வேடிக்கைகள்!

* * *

சென்ற 7 வாரங்களாக யாழ்ப்பாணத்தில் மோசமான பச்சை அரிசியே கூப்பனுக்குக் கொடுப்பதாகவும் சாப்பிட முடியவில்லை என்றும் சில அன்பர்கள் புகார் செய்கின்றார்கள்.

கொழும்பிலே ஓர் அன்பர் பச்சை அரிசியே கிடைக்க

(5ம் பக்கம் பார்க்க)

# மூன்று மாதத்துக்குள் மூன்று உபதேர்தல்கள்

கொழும்பு, வெள்ளி

வெலிமடை, மூதூர், அனுராதபுரம் ஆகிய மூன்றுதொகுதிகளிலும் இன்னும் மூன்று மாத காலத்துக்குள் உபதேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த மூன்று தொகுதிகளின் உபதேர்தல்களும் விரைவில் நடைபெற வேண்டியது அவசியமென்று அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது. இந்த மூன்று தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களும் தயாராக இருப்பதாகவும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதும் விரைவில் உபதேர்தல்கள் நடைபெறக் கூடுமென்றும் தெரிகிறது.

தார்பூச்சு வழக்கில் சிறை சென்றதால் திரு. கே. எம். பி. ராஜரத்தின ஸ்தானத்தை இழந்தார். இதனால் வெலிமடை பார்லிமெண்ட் ஸ்தானம் காலியானது. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. த. ஏகாம்பரம் மரணமானதால் மூதூர் ஸ்தானமும், திரு. ஸ்ரீமேவன் கொடகே காலமானதால் அனுராதபுரம் ஸ்தானமும் காலியானது.

## கேணல் செராஜ் விடுதலை

### சிரியாவிலிருந்து புறப்பட்டார்

கெய்ரோ, ஏப். 5

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா தனியாகப் பிரிந்தவுடன், சதி, சந்தேக நடவடிக்கை காரணமாக சிரிய புரட்சி ராணுவத் தலைமைப் பீடத்தினால் காவலில் வைக்கப்பட்ட ஐக்கிய அரபுக் குடியரசின் முன்னாள் உதவி ஜனாதிபதியும், நஸாரின் வலக்கரம் போல் விளங்கியவருமான கேணல் அப்துல் ஹமீத் செராஜ் நேற்று விடுதலை செய்யப்பட்டாரென்று மத்திய செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் கூறியதாக கெய்ரோ ரேடியோ அறிவித்தது.

விடுதலை அடைந்த கேணல் செராஜ் தமது குடும்பத்துடன் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார்.

# சேர் லெஸ்லி மன்ரேவுக்கு நீதி மந்திரி பதில்

## "தந்தியில் அரசாங்கத்தை கண்டிப்பது பொருத்தமா?"

கொழும்பு, வெள்ளி

"நீங்கள் உங்கள் கருத்தை வெளியிட துரதிர்ஷ்டவசமாக தெரிவுசெய்தபோதிலும், சதி வழக்கு விசாரணையில் பார்வையாளர் ஒருவர் பிரசன்னமாகவிருக்க அனுமதியளிக்க வேண்டுமென்ற உங்களின் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்" என்று நீதிமந்திரி செனட்டர் சாம். பி. ஸி. பெர்னண்டோ, சர்வதேச நீதிநிபுணர் கமிஷனின் தலைமைக்காரியதரிசி சேர். லெஸ்லிமன்ரோவுக்கு அனுப்பியுள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 3ந் திகதி நீதிமந்திரி எழுதிய பதில் கடிதம் நேற்று பத்திரிகைகளுக்குவெளியிடப்பட்டது.

நீதிமந்திரி செனட்டர் சாம். பி. ஸி. பெர்னண்டோ தமது பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

நீங்கள் சென்றமாதம் 28-ந் திகதி சிட்னியிலிருந்து எனக்கு அனுப்பிய தந்தி அடுத்த நாள் வியாழக்கிழமை என் கைக்குக் கிடைத்தது. உங்கள் தந்திக்கு நான் பதிலெழுதுவதற்கு எனக்கு அவகாசம் கிடைப்பதற்கு முன்னரே உங்கள் தந்தியின் வாசகத்தையும் உங்கள் தந்தியில் சேர்க்கப்படாத சர்வதேச நீதிநிபுணர் கமிஷனின் அறிக்கையையும் உலகப்பத்திரிகைகளுக்கு வெளியிடுவது பொருத்தமென்று நீங்கள் நினைத்து விட்டீர்கள்

உங்கள் தந்திக்கு நான் இன்னும் பதிலளிக்கவில்லையென்று வெல்லிங்டனில் திங்கட்கிழமை நீங்கள் அறிக்கை வெளியிட்டது பொருத்தமென்று உங்களுக்குத் தோன்றியிருக்கிறது.

இந்த நாட்டு அரசாங்கத்தைக் கண்டிக்கும் உங்களுடைய அறிக்கை போன்ற ஒன்றைத் தந்தியில் அனுப்புவது சரியானதுதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்காததற்காக நான் வருந்துகிறேன்.

தோல்வியில் முடிவடைந்த புரட்சித் திட்டம் கண்டு பிடிக்கப்பட்டதற்கு ஒரு நாள் முன்பு அதாவது ஜனவரி மாதம் 26-ந் திகதி நீங்கள் இந்த நாட்டில் வந்திறங்கினீர்கள். உங்கள் சார்பில் ஜனவரி 31-ந் திகதி நடைபெற்ற இரவு விருந்துபசாரத்திற்கு எனக்குக் கிடைத்த அழைப்பை நான் ஏற்றுக் கொண்டிருந்தேனாயினும் அந்த விருந்து வைபவத்தில் கலந்துகொள்ள முடியாதிருப்பதற்காக ஜனவரி 31 ந் திகதி 'டெலிபோனில்' உங்களுக்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன்.

உங்களுடன் நான் டெலிபோனில் சம்பாஷித்துக் கொண்டிருந்த சமயம், 'சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா?' என்று நீங்கள் என்னிடம்கேட்டீர்கள். அவ்வித ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் விரும்பினால்அதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்று நான் பதிலளித்தேன்.

சதிவழக்கு விசாரணையின் போது சர்வதேச நீதி நிபுணர் கமிஷனின் பார்வையாளர் ஒருவர் பிரசன்னமாகவிருக்க அனுமதியளிக்க வேண்டுமென்று நீங்கள் அப்பொழுது கோரினீர்கள். (அப்பொழுது சதித்திட்டம் கண்டு பிடிக்கப்பட்டு சரியாக நான்கு நாட்கள் தான்) அப்பொழுது அரசாங்கம் புலன் விசாரணை செய்து கொண்டும் சந்தேகப் பேர்வழிகளைக் கைதுசெய்து கொண்டுமிருந்தது. வழக்கு விசாரணைக்கு விசேஷ சட்டமியற்றுவதுபற்றி அரசாங்கம் அப்பொழுது சிந்திக்கவே இல்லை. உங்கள் கோரிக்கையை உரியசமயத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று நான் அச்சமயத்தில் உங்களுக்குப் பதிலளித்தேன.

அந்தச்சமயத்திலும் இன்றும் கூட உங்கள் அனுதாபம் இந்த நாட்டின் சட்டரீதியான அரசாங்கத்தின் பாலில்லாது அதைக் கவிழ்க்க முயற்சி செய்த சதிகாரர்கள் மீதிருப்பதாகத் தோன்றுவது வருந்தத்தக்குரியது.

சர்வதேச நீதிநிபுணர் கமிஷன் வெளியிட்டதாகக் கருதப்படும் அறிக்கை நேற்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்துக்கெதிரான நடவடிக்கை சம்பந்தமான குற்றச்சாட்டின் கீழ் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. 'அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைக்கும் தேசத்துரோகத்துக்கும்' உள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்."

நீதியமைச்சர் தமது பதில் கடிதத்தின் இறுதியில், ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய இலங்கை மக்கள், சதிகாரர்களைத் தண்டிப்பதற்கு அவசியமெனக் கருதியே புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளனரென்றும் இலங்கை பார்லிமெண்டில் பெரும்பான்மையான ஆதரவுடன் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சத்திர சிகிச்சையில் புதுமை

### வேறு எலும்புகளைப் பொருத்தும் ஒட்டுமுறை

டாட், ஏப். 6

இதர துறைகளிலுள்ள நிபுணர்களைக் காட்டிலும் வைத்தியத்துறை விஞ்ஞானிகள் மனித குலத்தின் எதிர்காலம் மிக சிறப்பான முறையில் அமைந்திருக்கும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர். கீல் நகரில் சமீபத்தில் நடைபெற்ற ஒரு பல்கலைக்கழக மகாநாட்டில் பல துறைகளிலுள்ள நிபுணர்கள் கூடி "விஞ்ஞானத்தின் முன்னேற்றம்" என்பது குறித்து விவாதித்தனர். வக்கீல்கள் தத்துவஞானிகள் ஆகியோர் மனிதவர்க்கத்தினர் தங்கள் அபிலாஷைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று பேசினர். ஆனால் விஞ்ஞானிகள் மனித குலத்திற்கு சுபிட்சமான எதிர்காலம் இருக்கிறதென்று கூறினர்.

கீல் சாத்திர நிபுணரும், பல்கலைக்கழக சாஸ்திர துறை இயக்குனருமான பேராசிரியர் வாங்கே தன் கருத்தைத் தெரிவிக்கையில் சமீப வருஷங்களில் சஸ்த்திரசிகிச்சைத் துறையில் பிரமாதமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்று கூறினர். ரத்த அழுத்தம் உடல் சீதோஷ்ணம் இவை விஷயங்களில்கூட சிகிச்சை முறைகளைக்கையாண்டு வெற்றி காண முடியும் என்றும் அவர் கூறினர். வேலை செய்வது நின்றுபோன ஹிருதயத்தைக் கூட ஓட்டவைத்துவிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேமாதிரி தீவிபத்தில் ஏற்பட்ட உடல் சேதங்கள், மூளைக்கு ஏற்பட்ட சேதம் மற்றுமிதர நோய்கள் இவைகளை எல்லாம் குணப்படுத்த வழிகள் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. முன்பு இம்மாதிரி நிலைமை எல்லாம் கைவிடப்பட்டவைகளாகும். ஆனால் இன்று எப்பேர்ப்பட்ட நிலைமையையும் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட முடியும்.

பாதிக்கப்பட்ட உடல் உறுப்புக்கள், எலும்புகள், தசைகள் இவைகளை அகற்றி அந்த இடங்களில் வேறு உறுப்பு, எலும்பு, தசை இவைகளைப் பொருத்தும் விஷயமாக உள்ள அத்யாயத்தைப் போல் மிக சுவராஸ்யமானதுசஸ்திர சாஸ்திரத்திலேயே இல்லை என்று பேராசிரியர் வாங்கே கூறினர். பிராணிகளின் எலும்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் விஷயமாகவும் வெற்றி ஏற்பட்டுவிட்டதென்றும் அவர் கூறினர்.

வேறொரு தசையை மனித உடலில் வைத்துப் பொருத்தினால் எளிதில் "ஆண்டி ஜென்ஸ்" என்கிற ஒருவித பொருள் ஏற்பட்டு குணமாவதைப் பாதிக்கும். இதைக் கவனியாது விட்டால் சில மாதங்களில் வைத்துப்பொருத்திய எலும்பையோ தசையையோ அகற்றும்படியாக நேரலாம். இம்மாதிரி ஏற்படும் இடைஞ்சலை நீக்கவும் வழி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. இதற்கான இரு முறைகளில் ஒன்று "எக்ஸ் ரேடியேஷன்" என்ற கிரண வீச்சின் மூலம் புதுப்பொருள் ஏற்படாமல் தடுப்பது. மருந்துகள் மூலம் இதைச்சாதிப்பது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரமான வழி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

மற்றொரு முறை பொருத்தப்படும் எலும்புத் தசைகள் இவைகளை முன்னதாகவே பண்படுத்தி "ஆன்டிஜென்ஸ்" என்ற பொருள் ஏற்படாமல் செய்வது முக்கியமாக இத்துறையில் கீல் நகர விஞ்ஞானிகள் மிகப்பிரமாதமான வெற்றியை அடைந்துள்ளனர். கன்றுக்குட்டிகளின் எலும்புகளை எடுத்து பதம் செய்து பக்குவப்படுத்தி அவர்கள் வைத்துள்ளனர். மனித உடலில் வைத்துப் பொருத்துவதற்காகத் தயாரிக்கப்படும் இந்த எலும்புகளில் "ஆன்டிஜென்ஸ்" என்றவிஷப்பொருள் உற்பத்தியாகாமல் இருக்கும்படி செய்வதற்கான ஒரு நூதன முறையை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

சத்திர சிகிச்சைத்துறையில் இந்த சாதனை இல்லாமலிருந்தால் அது ஒரு பெரும் இடைவெளியாகவே இருந்துவரும். வைத்தியத் துறையில் இம்மாதிரி இடைவெளிகள் இருக்கவே இடமளிக்கக் கூடாது என்று பேராசிரியர் வாங்கே கூறுகிறார். மருந்துகளின் முக்கிய நோக்கம் மனித வர்க்கத்தினரை ஆரோக்கியத்துடன் வாழச்செய்வதே. உருப்புகளைப் பொருத்தும் சத்திரசிகிச்சைக் கலையில் ஆடோ பிளாஸ்டிக்ஸ், ஹோமோ பிளாஸ்டிக்ஸ், ஹெட்ரோபிளாஸ்டிக்ஸ் என்ற மூன்று முறைகளிலும் மேற்கு ஜெர்மன் தலைமை வகித்து நிற்கிறது. இத்துறைகளில் மேலும் ஏற்படும் முன்னேற்றங்களால் மனிதகுலம் மேலும் பயனடையும் என்று எதிர்பார்க்கலாம்.

# சமசமாஜக் கட்சியிலிருந்து உதவிமேயர் பதவி நீக்கம்

## எல்லோரையுமே நீக்க வேண்டுமென்கிறார் அவர்!

யாழ்ப்பாணம், வெள்ளி

சமசமாஜக்கட்சி அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டு அப்பொழுது மாநகரசபை உதவிமேயராகவிருக்கும் திரு ஏ. துரைராஜசிங்கத்தை கட்சி லங்கத்துவத்திலிருந்து லங்கா சமசமாஜக்கட்சி மத்திய குழு நீக்கிவிட்டது. இவ்விஷயம் இக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக திரு. துரைராஜசிங்கம் தெவித்ததாவது:-

வண்ணர்பண்ணை சமசமாஜ வாலிப முன்னணியின் புகார்கள் ஒவ்வொன்றையும் மத்திய குழு ஒழுங்கு நடவடிக்கையெடுப்பதற்காக தெரிவுசெய்வது ஆச்சரியமாகஇருக்கிறது. தமிழ் இயக்கப் போராட்டம் சமஷ்டிக்கட்சியின் முத்திரை விற்கும் இயக்கம் ஆகிய சத்தியாக்கிரக இயக்கங்களில் ஈடுபட்டதாக இந்த வாலிப முன்னணி என்மீது குற்றம் சுமத்தியது.

சத்தியாத்கிரகம் மிகப்பெரிய மக்கள் இயக்கமாகும். இதில் லங்காசமசமாஜக்கட்சி அங்கத்தினர் பலர் பங்கெடுத்திருந்தனர். மாநகரசபையிலுள்ள மற்ற ல. ச. ச. க. அங்கத்தவரும் என்னுடன்கூட இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார்.

யாழ்ப்பாணக்கிளை மற்ற எல்லோரையும்தவிர்த்துவிட்டு கட்சியில் நீண்டநாளாக அங்கம் வகிப்பவனும், தொழிலாளர் பிரதிநிதியுமான நானே பொருத்தமானவன் எனக் கருதி தங்கள்சவுக்கை என்மீது உபயோகித்திருக்கின்றனர்.

என்னைக் கட்சியிலிருந்து நீக்குவது நீதியானதென்றால் 75 வீதமான யாழ்ப்பாண சமசமாஜக் கிளையின் சங்க அங்கத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்தாகவேண்டும்

## ஆந்திர மந்திரிசபை விவகாரம்

### புதுடில்லியில் சஞ்சீவையா

புதுடில்லி, ஏப். 5

புதுடில்லி வந்துள்ள ஆந்திர ராஜ்ய முன்னாள் முதல் மந்திரி திரு. டி. சஞ்சீவையா, உள்நாட்டு மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய், முன்னாள் காங்கிரஸ் அக்ராசனர் திரு. யு. என் தேபர், ரயில்வே மந்திரி திரு. ஜகஜீவன்ராம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

திரு. சஞ்சீவரெட்டியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆந்திர மந்திரிசபையில் தான் ஏன் 'சேரவில்லை என்பதற்கு பிரதமர் நேருவைச் சந்தித்து விளக்கங்கூறப்போவதாக திரு. சஞ்சீவையா தெரிவித்தார்.

## ஜயசூரியாவுக்கு இரு பதவிகள்

கொழும்பு, வெள்ளி

நீதிமந்திரி செனட்டர் சாம் பி. ஸி. பெர்னன்டோ வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பிவரும்வரை சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவே நீதியமைச்சராகவும் கடமையாற்றுவார்.

## புதுவருட முற்பணம்

கொழும்பு, வெள்ளி

துறைமுகத் தொழிலாளர் தமது புதுவருடக் கொண்டாட்ட முற்பணத்தை இம்மாதம் 7ந் திகதி பெற்றுக் கொள்ளுவார்கள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் ரூ. 100 முற்பணம் பெற்றவர்களும் மார்ச் வரையில் மாதாந்தம் ரூ. 10 செலுத்திவந்தவர்களும் இரண்டாம் முறையாகரூ. 30 முற்பணமாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

டிசம்பரில் கொண்டாட்ட முற்பணம் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு ரூ. 100 கொடுக்கப்படும்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று குறை சொல்லுகிறார்! அதிகாரிகள் இதைக் கவனித்து தக்க நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும்.

## பழிதீர்த்த சிறுவன்

பிலடெல்பியா, ஏப்ரல் 4

ஆங்கிலப் பரீட்சையில் தவறியதற்காகப் பெற்றோரால் தண்டிக்கப்பட்ட 14 வயதுச் சிறுவன் ஒருவன் அவர்களைக் கொன்று பழிதீர்த்துக்கொண்டான்.

பிறகு அவன் தன் மதகுருவிடம் சென்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். உடனே அவர் பொலிஸிடம் தெரிவித்தார். பொலிஸார் சென்றபோது அந்தப் பெற்றோர்கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்ததைக் கண்டனர்.

# 'திட்டம் அமைத்து சமயக் கல்வி போதிக்கவேண்டும்'

## ஆசிரியர்களுக்கு உதவி வித்தியாதிபதி யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

"சமயக கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் அதற்கேற்பத் திட்டம் அமைத்து போதிக்க வேண்டும். ஆசிரியர்கள் ஒழுக்கமும், பண்பாடும் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்" என்று உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் சைவசமயபாட ஆராய்ச்சிக் கழகக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

"தேசிய கல்வித் திட்டத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் அவரவர்க்குரிய சமயக் கல்வி போதிக்கப்படுவதற்கான ஒழுங்கை அரசாங்கம் வகுத்துள்ளது. தந்தையின் சமயம் எதுவோ அதுவே பிள்ளையின் சமயமாகும். இவ்வித ஒழுங்கு இருக்கும்போது சமயக் கல்வியை மாணவன் கற்பதற்கும் சமயப் பண்பாடுள்ளவர்களாய் அவர்கள் விளங்குவதற்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும். சமயக் கல்விதான் பிள்ளைகளின் வாழ்வைப் பரிமளிக்கச் செய்து அவர்களைக் குணசீலராக்குவது. இதற்கேற்ற வகையில் திட்டமமைத்து ஆசிரியர்கள் சமயக் கல்வியைப் போதிக்க வேண்டும். சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அதில் நிறைந்த ஞானமும், ஒழுக்கமும், பண்பாடும் நிறைந்தவர்களாய் இருக்கவேண்டும். சைவ சமயபாடத்தை ஆசிரியர்கள் திறம்படப் பயிற்றுவதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்கும் சமய அறிவைச் சம்பாதிப்பதற்கும் சைவசமய ஆசிரியர்களிடையே ஒரு கழகம் இருக்க வேண்டியது மிக இன்றியமையாதது. ஆசிரியர்கள் இவ்வகையான கழகங்களினுல் தமது சமய அறிவைப் பூரணப் படுத்துவதுடன் இக்கழகங்கள் மூலம் மாணவர்களுக்குகந்த பாடத் திட்டத்தையும் வகுத்துக்கொள்ளலாம். எனவே சைவாசிரியர் சங்கம் ஒன்று மிக இன்றியமையாதது"

சைவசமயப் பாடங்கள் கற்பிக்கும் முறைகளை ஆராயும் நோக்கமாக இந்துக் கல்லூரி மண்டபத்தில் கூட்டப்பெற்ற சைவசமயப்பாட ஆராய்ச்சிக் கழகத்துக்கு திரு. எஸ். யூ சோமசேகரம் தலைமை வகித்துப் பேசினர். பண்டிதர் சோ இளமுருகனர், பண்டிதர் எம் சின்னத்தம்பி, திரு. எஸ். அம்பிகைபாகன், வித்வான் இ. திருநாவுக்கரசு, பண்டிதை அமுதாம்பிகை சதாசிவம் என்போர் உரையாற்றிய பின் சைவ சமய ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

போஷகர்: உதவி வித்தியாதிபதி எஸ். யூ. சோமசேகரம். தலைவர்: திரு. எம். ஞானப் பிரகாசம். உப தலைவர்கள்: திரு. சோ. இளமுருகனர், திரு. பொன். முத்துக்குமாரன், ஸ்ரீமதி. அமுதாம்பிகை சதாசிவம். காரியதரிசி: திரு. எஸ். வைத்தியலிங்கம்.

திரு. துரைரத்தினம், திரு. இ. திருநாவுக்கரசு, திரு. விஸ்வநாதன், திரு. ச. பஞ்சாட்சர ஐயர், திரு. எஸ். சின்னத்துரை, வித்வான் சி. ஆறுமுகம், திரு. வல்லிபுரம் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# இளம் பெண்ணின் திடீர் மரணத்தின் மர்மம்

## தாயார் இறந்த ஒருவாரத்தில் மகனும் மாண்ட புதிர்

### தெல்லிப்பழை கிழக்கில் சம்பவம்

தெல்லிப்பழை, வியாழன்

"ஒரு வீட்டில் ஒரு வாரத்துக்குள் தாயும் மகளும் திடீரென்று மரணமானது மர்மமாகவே இருக்கின்றது" என்று திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். பூதப்பிள்ளை தெல்லிப்பழை கிழக்கில் நிகழ்ந்த ஒரு மரணம்சம்பந்தமாக விசாரணைசெய்கையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் புளியடியைச் சேர்ந்த அண்ணுமலையின் மனைவி சின்னத்தங்கம் (வயது 15) என்னும் இளம் பெண்ணின் மரணம் குறித்து விசாரணை நடாத்தப்பட்டது.

காலஞ்சென்ற இளம் பெண்ணின் தந்தை முருகன் கணபதி சாட்சியமளிக்கையிற் கூறியதாவது:-

சுடந்தமாதம் 28-ம் திகதி காலஞ்சென்றவருக்கும் அண்ணுமலை என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. தம்பதிகள் இன்பமாகவே வாழ்ந்தனர்.

இம்மாதம் மூன்ரும் திகதி எனது மகள் வாந்தியெடுத்தார். மறுநாட் காலை 6 மணியளவில் மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கமுடியாது போகவே எனது மகளை வீட்டிற்குக் கொண்டுவந்தோம். வீட்டுக்குக் கொண்டுவந்தபின்னர் இதே ஊரைச்சேர்ந்த கந்தர் சின்னத்துரை என்னும் நாட்டு வைத்தியர் எனது மகளுக்குச் சிகிச்சையளித்தார். மறுநாட் காலை இரண்டுமணியளவில் எனது மகள் காலமானர். இந்த மரணம்பற்றி எனக்கு எதுவித ஐயமும் கிடயாது

காலஞ்சென்ற பெண்ணின் கணவன் அண்ணுமலை சாட்சியமளிக்கையிற் குறிப்பிட்டதாவது:-

எனது மனைவியின் 'மரணம் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. இந்த மரணத்திற்குரிய காரணம் எனக்குப் புலப்படவில்லை.

சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பெரேர சாட்சியமளிக்கையிற் குறிப்பிட்டதாவது:-

எம். ஓ. எச். அனுப்பிய செய்தியைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு வந்தேன். இங்கு விசாரணை நடத்தியபோது இவ்வாரத்தில்' காலஞ்சென்றவரின் தாயரும் வாந்தியெடுத்ததின் பின் இறந்ததாகக் கேள்விப்பட்டேன். இவ்விரு மரணங்களும் புதிராக இருக்கின்றன.

உதவிச் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வைத்திலிங்கம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

சின்னத்தங்கத்தின் பிரேதத்தைப் பரிசோதனை செய்தேன். அவருடைய ரத்தாசயத்தைப் பரிசோதித்த பின்னரே என்னல் இம் மரணம் பற்றிக் காரணங்களைக் கூற முடியும்.

மரணவிசாரணை அதிகாரி பிரேதத்தை அடக்கஞ்செய்ய உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

# யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் முன்னேற்றம்

## புதிய குழந்தைகள் 'வார்டு' திறப்புவிழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு எப்பொழுதும் ஓர் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறது. இதிலேதான் அதன் வளர்ச்சியும் தங்கியுள்ளது. இதற்கு இங்குள்ளவர்களின் ஒத்துழைப்புத்தான் காரணம்."

இவ்வாறு யாழ்ப்பாணவைத்திய சுப்பிரிண்டன் டாக்டர் என். எச். எஸ். நதானியல் இன்று ஒரு புதிய வார்டைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இப்பொழுதுள்ள குழந்தைகள் சிகிச்சை நிலையத்திற்கு மேல் மாடியில் புதிதாக ஒரு 'வார்டு' நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புதிய வார்டு சுமார் 65 நோயாளர்களுக்கு இடவசதியளிக்கக் கூடிய நவீனமுறையில் அமைந்துள்ளது. 'லிப்ட்' முறை அமைப்பதற்கு வசதிசெய்யப் பட்டிருக்கும் இந்த 'வார்'டில் இந்தவசதி இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. இன்று காலை குத்து விளக்கேற்றி வைத்திய சுப்பிரிண்டன் இதனைத் திறந்துவைத்தார். இந்த வைபவத்தில் ஆஸ்பத்திரி ஆலோசனைச்சபை அங்கத்தவர்கள், முக்கிய பிரமுகர்கள், டாக்டர்கள், ஊழியர்கள், மாநகரசபை ஆணையாளர் முதலிய பலரும் கலந்துகொண்டனர்.

டாக்டர் நதானியல் பேசியதாவது:-

இந்த ஆஸ்பத்திரியில் டாக்டர்கள், ஊழியர்கள், அதிகாரிகள், ஆலோசனை அங்கத்தவர்கள் அனைவரும் நன்முறையில் ஒத்துழைத்து இதன் வளர்ச்சிக்கு உழைத்துவருகிறர்கள். ஆலோசனைக் கமிட்டியினதும், முக்கியமாக இங்கு கடமையாற்றும் ஆஸ்பத்திரிக் காரியதரிசி திரு. இரத்தினசபாபதியின் ஊக்கத்தாலும் கடமையுணர்ச்சியாலும் இங்கு பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இவர்கள் அனைவரையும் பாராட்டவேண்டும்.

டாக்டர் வி. டி. பசுபதி, டாக்டர் எஸ். கனகரத்தினம் ஆகியோரும் பேசினர். சிற்றுண்டி விருந்தொன்றும் நடைபெற்றது.

## "புராணக்கல்வி பண்பை வளர்க்கும்"

### உதவி வித்தியாதிபதி கருத்து

பளை, வியாழன்

"தேசிய கல்வித்திட்டம் ஓர் சிறந்த முறையாகும். கல்விக் கமிஷன் ஏற்படுத்துவதன் மூலம் நாம் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சிப்போம். பாடசாலை ஆசிரியர்களுக்கு பெற்றேர்கள் என்றும் உதவியாக இருக்கவேண்டும். ஓய்வுநேரங்களில் கந்தபுராணம் போன்ற புராணங்களைப் பிள்ளைகள் கற்பது சிறப்பது அது அவர்களைச் சிறந்த பண்புள்ளவர்களாக மாற்றும்."

பளை அரசினர் மகாவித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் திரு. வி. செல்லையா தலைமையில் நடைபெறற பெற்றோர்தின வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் மேற்கண்டவாறு கூறினர்.

"மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசச்களை நாம் வேறெந்த மொழியிலும் காணமுடியாது. அருச்சுனன் போன்ற வீரனையும், தருமன் போன்ற பொறுமைசாலியையும் நாம் காணும்போது நாமும் அப்படி ஏன் மாறக் கூடாது. மனிதனின் பிரதிபிம்பமே உலகம். நம்பிக்கை, ஒத்துழைப்பு, ஒழுக்கம் ஆகிய ஊன்றுகோல்கள கொண்டுதான் நாம் முன்னேறவேண்டும்'' என்று திரு. சோமசேகரம மேலும் கூறினர்.

பாடசாலை மாணவிகளின் கதம்பநிகழ்ச்சியும் நடைபெற்றது.

---

## காதணி திருட்டு வழக்கில் எதிரிவிடுதலை

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த சின்னர் மனைவி பொன்னு என்பவரிடம்25ரூபா பெறுமதியான காதணியைக் கொள்ளையடித்ததாக குட்டியர் சின்னத்தம்பி என்பவர்மீது காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

சின்னர் மனைவி பொன்னு சாட்சியமளித்தார்.

எதிரி தரப்பில் ஆஜரான திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சியைக் குறுக்குவிசாரணைசெய்தார். அப்போது சாட்சி கூறியதாவது :— நான் முதலில் ஒருவரை விவாகஞ் செய்திருந்தேன். அவர் இறந்ததும் மறுவிவாகஞ்செய்தேன். தற்போது அவரிடமிருந்து பிரிந்து வாழ்கின்றேன். எதிரியை எனக்குத் தெரியும்.

சாட்சியம்முரண்பாடாகஇருப்பதாகக் கூறிய நீதிபதி "எதிரியைப் பார்த்து 'நீர் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அந்த மனுஷியின் வீட்டுக்குப் போயிருப்பது தெரிகிறது. சாட்சியம் முரண்பாடாக இருப்பதலை் நீர் விடுதலை செய்யப்படுகிறீர்" என்று கூறினர்.

காங்கேசன் துறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. தாமோதரம் வழக்கை நடத்தினர்.

---

## புராணபடிப்பு முடிந்தது

தொல்புரம், வியாழன்

அஷ்டகிரக சேர்க்கையை யொட்டி தொல்புரம் மானுமுதலியார் மடத்தில், தொல்புரம் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட புராணப்படிப்பு நடராஜப்பெருமானுக்கு விசேஷபூசையுடன் முடிவுற்றது.

## நஞ்சருந்தி மரணம்

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த நடுவிலான் வன்னியன் என்பவரின் மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. என். பூதப்பிள்ளை விசாரணை நடத்தினர். இறந்தவரின் மனைவியான இலட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்றவர் எனது கணவர். எங்களுக்கு நாலு பிள்ளைகளுண்டு. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு எனது கணவரும் நானும் பிள்ளைகளும் சாப்பிட்டபின்பு படுத்துறங்கினேம். மறுநாட் காலை 5-30 மணியளவில் சடையன் எல்லுப்போலையன் எனது கணவர் கிருமிநாசினி குடிப்பதாகச் சத்தமிட்டார். நான் உடனே ஸ்தலத்திற்குச் சென்றேன். எனது கணவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்து கிடந்தார். பக்கத்தில் கிருமிநாசினித் தகரமும் இருந்தது. நான் கூக்குரலிடவே இளையவன் வல்லியன் உட்படப் பலர் அவ்விடம் வந்தனர். அவர்கள் எனது கணவரை எனது வீட்டுக்குக்கொண்டுவந்தனர். வீட்டுக்குக் கொண்டுவந்ததும் எனது கணவர் காலமானர்.

நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

## கண்ணகை அம்பாள் வருடாந்த உற்சவம்

ஊர்காவற்றுறை, வியாழன்

பிரசித்திபெற்ற ஆலயமான புங்குடுதீவு கண்ணகை அம்பாள் என வழங்கும் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 10-ம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிப் பத்து நாட்களுக்கு நடைபெறவிருக்கிறது..

19-ம் திகதி நடைபெறும் ரதோற்சவத்தை அடுத்து பூங்காவனம் - தெப்பத்திருவிழா நடைபெறும்.

மிகத் திறமையான
பவர்ஸ்
உரங்கள்
கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்
லாபகரமாய் பயிரிட
- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை
மற்றும் பழவகைகளும்
கிடைக்குமிடம்
ஏ. பவர்
அன் கொம்பனி லிமிட்டெட்,
த. பெ. 11, கொழும்பு

# சுகாதாரக் குறைவான உணவுச் சாலைகள்

## நடவடிக்கை எடுக்க நகல் சட்டம்

கொழும்பு, புதன்

சுகாதாரக்குறைவான முறையில் நடைபெற்றுவரும்உணவுச் சாலைகள் மீது உடனடியாகவே நடவடிக்கை எடுக்குமாறு ஸ்தலஸ்தாபன சபைகளை வலியுறுத்தும் நகல் சட்டங்களைச் சுகாதார இலாகா வரையுறை செய்து ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

உணவுச் சாலைகளில் ஏற்பட்டுவரும் சுகாதார 'தரக் குறைவுகள், பற்றி வைத்திய அதிகாரிகள் குறிப்பிட்டதன் பேரில் ஸ்தல ஸ்தாபன சபைகள் மேற்படி நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நெருப்புக்காச்சல் வயிற்றுளைவு ஆகிய நோய்கள் சமீபத்தில் பரவிவருவதற்கு உணவுச் சாலைகளின் சுகாதாரக் குறைவே காரணம் எனச் சுகாதார இலாகா குறிப்பிட்டுள்ளது.

உணவுச்சாலைகளின் சுகாதார நிலைமைகள் பற்றி ஸ்தல ஸ்தாபன சபைகள் கவனமெடுக்காவிடில், சுகாதார இலாகா இவ்விஷயம் பற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சுடன் கலந்தாலோசிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### புது வருடத்தில் விளையாட்டுப் போட்டி

நீர்வேலி, வெள்ளி

தமிழ் புதுவருட தினத்தை முன்னிட்டு இம்மாதம் 15-ம் திகதிகாமாச்சியம்பாள் சன சமூகநிலைய ஆதரவில் விளையாட்டுப்போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது. இவ்வருடப் போட்டி இச் சன சமூக நிலையத்துன் மூன்றுவது போட்டியாகும். இதில் காந்தி, பாரதி ஆகிய இரு இல்லங்கள் பங்கு கொள்கின்றன.

---

### ஒரு வருடத்தில் வாக்காளர் தொகை 10 லட்சம் அதிகம்!

கொழும்பு, வெள்ளி

வாக்காளர் தொகை 1960 ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது இருந்ததிலும் 10 லட்சம் அதிகமாகியுள்ளதாக 1961 வாக்காளர் பட்டியலிலிருந்து தெரிய வந்துள்ளது.

தேர்தல் தொகுதி வாக்காளர் பட்டியல்கள் இன்று தொடக்கமாக 'கஸட்' அறிவித்தல்கள் மூலம் அரசாங்க அதிபர்களால் அத்தாட்சிப் படுத்தப்படும்.

1960 ஜூலை பொதுத்தேர்தலின் போது வாக்காளர் தொகை 3,72 2,407 ஆக இருந்தது. 1961-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில், வாக்காளர் தொகை 4,600,000 ஆக இருந்தது என தேர்தல் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தப்பட்டியலில் 18,19 வயது வாக்காளர்கள் பெயர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

---

### பஞ்சாபி மொழி சர்வகலாசாலை

அமிர்தசரஸ், ஏப். 6

பஞ்சாபி சர்வகலாசாலையை பட்டியாலாவில் அமைப்பதென்று பஞ்சாப் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பஞ்சாபி மொழியின் வளர்ச்சியையே இச்சர்வகலாசாலை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் சரித்திரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளும் இடம் பெறும்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 7-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம். 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தகின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 உலக சுகாதாரதினம்-சித்திரம், 6-15 கிராம சஞ்சிகை. 6-45 கிரிஜா சுப்பிரமணியம்--பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும் — செய்திச் சுருள், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 கே. கே. கிருஷ்ணபிள்ளை—பாட்டு, 1-15 நாட்டிய இசை.

ஞாயிறு 8-4-62

காலை 6-45 உதய கீதம் 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 தமிழ்மூலம் சிங்களம்—26, 8 30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைக் குரல், 6-30 ஈ சுப்பையா—கிளாரினட்

இரவு 7 00 மாதர் கேட்டவை, 7-30 என். பி. பாலசுந்தரம்—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'துன்பம் எங்கே'—நாடகம், 9-45 தேர்ந்த இசை, 10-00 தமிழ் சேவை (பி. பி. ஸ் அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

சனி 7-4-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 சிக்கில் ஆர். பாஸ்கரன்—வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 சிக்கில் ஆர். பாஸ்கரன்—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'அன்னை'-நாடகம் (சென்னை அஞ்சல்), 8-15 திரைப்பட இசை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 8-4-62

காலை 6-45 மங்கள் இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கே. வாசுதேவன்-பாட்டு, 8-15 திருப்பணத்துறை கே. கோவிந்தராவ்—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி—கதம்பநிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை. 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சிக்கில் என். நீலா—புல்லாங்குழல்.

மாலை 4-45 விவித்பாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கே. சரோஜா—பாட்டு, 8-30 கே. வாசுதேவன்-பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-30 சுகம் சங்கீத நிகழ்ச்சி.

---

### மயானத்திலிருந்து சடலம் அகற்றப்பட்டது

சென்னை, ஏப். 5

புலியூர்புரம் மயானத்தில் பெண்ணின் சடலம் ஒன்றை நகர பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைப்பற்றி, பிரேத சோதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரி சவக் கிடங்குக்கு அனுப்பினர்.

கண்ணம்மாள் (வயது 45) என்ற பெயருடைய அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. வன்னியர்த் தெருவிலுள்ள அவருடைய குடிசையில் பிரேதம் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது.

---

### தண்ணீர் 'மீட்டர்' உற்பத்தித் தொழிற்சாலை

திருவனந்தபுரம், ஏப். 5

தண்ணீர் மீட்டர்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று கேரளத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

---

### மீதியான பாலை சுகாதார இலாகா ஏற்கும்

கொழும்பு, வெள்ளி

பால் சபையின் மீதியான பாலை சுகாதார இலாகாவுக்கு விற்பனவு செய்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சுகாதார இலாகா இப்போது உபயோகிக்கும் தகர மாவுப் பாலுக்குப் பதிலாக பால்சபையிடம் பெற்றுக்கொள்ளும் பாலை சுகாதார இலாகா உபயோகிக்கும்.

விற்பனவு கிடையாதென்று தெரிந்தால் மேலதிகமான பாலை வாங்கிக்கொள்ளாதிருக்கும்படி பால் சபைக்கு அறிவிக்குமாறு, காணி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வாவை அரசாங்கம் கேட்டுள்ளது.

பால் சபையின் சுமார் 8,000 பைன்ட் பால் தினமும் வீணாகிப் போவதைத் தடுப்பதற்கே மேற்படி தீர்மானஞ் செய்யப் பட்டுள்ளது.

பால சபை தினமும் 35,000 பைன்ட் பால் வாங்கி வருகிறது. ஆனல் 29,000 பைன்ட்கள் வரை தான் இதனல் விற்க முடிடகிது. வார இறுதி நாட்களிலும் பள்ளிக்கூட விடுமுறை நாட்களிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் விற்பனவு மேலும் குறைந்து விடுவதுண்டு.

---

### இலாகாககளும வட்டி செலுத்த வேண்டும!

கொழும்பு, வியாழன்

அரசாங்க இலாகா எதுவும் திறைசேரிக்குப பணம் கொடுக்குமதியாக இருந்தால், திறைசேரிக்கு அந்த இலாகா 4 1/2 சதவீத வட்டி வழங்க வேண்டும். திறைசேரியிடம் இலாகாக்களின் பணம் இருந்து விட்டால் இலாகாக்கள் எதுவித வட்டியும் செலுத்தவேண்டியதில்லை. இந்தச்செய்தியைக் கூறும் சுற்றறிக்கை யொன்றை திறைசேரியின் நிதிக்கட்டுப் பாட்டதிகாரி சகல இலாகாத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துளளார்.

---

பால் நிலையங்களில் விநியோகிப்பதற்கெனச் சுகாதார இலாகா தினமும் 30 லட்சம் பைன்ட் பாலை, பால் சபையிடமிருந்து பெற்று வந்ததெனச் சுகாதார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இறக்குமதியாகும் தகரப்பாலையும் இலாகா விநியோகம் செய்து வந்துள்ளது.

---


# உங்கள் தேகத்தின் ஒவ்வொரு அசைவும் ப்ரோட்டீன் புசிக்கின்றது



உங்கள் தேகம் அசையும் ஒவ்வொருபோதும், நீங்கள் தேக உஷ்ணத்தையும் சக்தியையும் இழக்கின்றீர்கள். உங்கள் தேகம் ப்ரோட்டீனை எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. ஆனல் உங்கள் தேகத்திற்கோ, ப்ரோட்டீன் சேமித்து வைக்கக்கூடிய சக்தி கிடையாது. எனவே, நீங்கள் தினமும் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ள வேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத் தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சிக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கினறனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

## ப்ராண்ட்ஸ்

எஸன்ஸ் ஒப் சிக்கன்

AT-712-3

# எதிர்பார்த்ததை விட ஜனத்தொகை பெருக்கம்

## ஆசிய கல்விமந்திரிகள் மகாநாட்டில் அறிவிப்பு

டோக்கியோ, ஏப் 6

ஜனத்தொகை வளர்ச்சிக்கும், கல்விவிஸ்தரிப்புக்குமிடையே உள்ளவேகம் தங்கள் பகுதிகளில் எதிர்பார்த்ததைவிட அதிகக் கஷ்டம் அளிப்பதாக ஆசியக்கல்வி மந்திரிகளின் முதல் மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள பிரதிநிதிகளிடம் கூறப்பட்டது.

ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தின் (யுனெஸ்கோ) ஆக்டிங் டைரக்டர் ஜெனரலான ரெஜி மாஹு இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள 100 பிரதிநிதிகளிடமும், பார்வையாளர்களிடமும் 1959 லிருந்து எடுக்கப்பட்டுள்ள ஜனக்கணிதத்திலிருந்து ஜனதொகை வளர்ச்சி எதிர்பார்த்ததை விட 2 கோடி அதிகமாகிவிட்டதாகத் தெரிவித்தார்.

1980 க்குள் தங்கள் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கெல்லாம் இலவச கட்டாயக் கல்வியளிக்கவேண்டுமென்று 1930-ல் கராச்சியில் தீர்மானிக்கப்பட்டபடி இங்குள்ள திட்டங்களையெல்லாம் கல்வித் துறையினர் மாற்றியாக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசியாவிலுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கல்வி போதனை சாதன நிபுணர்கள் டோக்கியோவுக்கருகில் ஒரு மகாநாடு நடத்தி ஆசிய நாடுகளில் கற்பிக்கும் முறைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்புக் காணுவதற்குமான வழிவகைகளைப் பற்றிஆராய்ந்தனர்.

இம்மகாநாட்டில் இந்தியா, இந்தோனேஷியா, மலாயா, நியூஸிலாந்து, பிலிப்பைன்ஸ், பார்மோஸா, தாய்லாந்து, ஆகியநாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

---

## காஷ்மீர் பிரதமர்

ஸ்ரீநகர், ஏப்ரல் 6

காஷ்மீர் - ஜம்மு ராஜ்யத்தின் பிரதம மந்திரியாக திரு. பக்ஷிகுலாம் முகம்மது, மீண்டும் இன்று தெரிவுசெய்யப்பட்டார்.


புகழ் மணக்கும் சித்திரைப் புத்தாண்டின் விருந்து!
மக்கள் கண்குளிர இதயம் மகிழ வருகிறது!!
சினிமாஸ் திரைகளில்
இலட்சியம்! தியாகம்!! ஏக்கம்!!!
மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான
இலக்கியப் படைப்பு!



சிவாஜி கணேசன்
பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
வி. நாகையா – டி. எஸ். பாலையா
மனோரமா - கருணாநிதி
ஆகியோர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
பாலும் பழமும்
சங்கீதம் — விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன் ஏ. பீம்சிங்

3-வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
சித்திரா – அசாத் நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30-க்கு
எம். ஆர். ராதா – சௌகார்ஜானகி நடித்த
உலகம் சிரிக்கிறது

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு
பிரேம் நஸீர், எம். என். ராஜம் நடித்த
இருமனம் கலந்தால் திருமணம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

புதிய லோகசபை

## 16-ம் திகதி காலை கூடுகிறது

புதுடில்லி, ஏப்ரல் 6

இந்தியாவின் மூன்ருவது லோகசபை முதற்கூட்டம் இம்மாதம் 16-ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகும் என்று லோகசபை அலுவலகத்திலிருந்து இங்கு வெளியிடப்பட்ட பத்திரிகை குறிப்பு கூறுகிறது.

---

## தாயும் சேயும் கிணற்றில் மிதந்தனர்

### குடும்பத் தகராறு காரணமாம்

கோபிசெட்டிப்பாளையம், ஏப் 6

குடும்பத் தகராறு காரணமாக, தாயும், சேயும் கிணற்றில் பிணமாக மிதந்தார்கள்.

கோபி சந்து வீதியில் நடராஜன் நகைவேலை செய்து வருபவர். அவரது மனைவி கமலம் 25 வயது. குடும்பத்தில் ஒற்றுமை இல்லாததால் மனம் உடைந்த கமலா தன் கடைசிக் குழந்தை இரண்டரை வயதுள்ள சுலோசனவுடன் கிணற்றில்விழுந்து தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

---

## யானைகள் கோபம்

ராஞ்சி, ஏப்ரல் 6

கோபம்கொண்ட இரு கொம்பன் யானைகள், ராஞ்சி ஹஸாரிபாக் சாலையில் ராஜ்ய பஸ் ஒன்றை தாக்கி கவிழ்த்து விட்டன என்று இங்கு வந்துள்ள தகவல்களிலிருந்து அறிய வருகிறது.

ஆச்சரியப்படத் தக்க விதமாக பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் காயமின்றி தப்பி அருகாமையிலிருந்த காடுகளுக்குள் ஓடி தப்பித்தார்கள்.

பின்னர் அந்த யானைகள் பஸ்ஸை மிதித்து துவம்சம் செய்தன.

---

## விராடநகருக்கு துருப்புகள்

காட்மாண்டு, ஏப். 5

கிழக்கு நேப்பாளத்திலுள்ள விராடநகருக்கு காட்மாண்டிலிருந்து சென்ற இரண்டு தினங்களாக விமானத்தில் துருப்புக்கள் அனுப்பப்பட்டன

கிழக்கு நேப்பாளத்தில் தேசிய எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## அல்ஜீரியாவில் 22 பேர் பலி

### ஒரு ஐரோப்பியருக்கு 20 வருட தண்டனை

அல்ஜீயர்ஸ், ஏப்ரல் 6

அல்ஜீரியாவில் நேற்று ஏற்பட்ட சம்பவங்களின் விளைவாக 22 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயம் அடைந்தனர். முஸ்லிம் ஒருவரைக் கொன்றதற்காக 22 வயதான ஒரு ஐரோப்பியருக்கு 20 ஆண்டுக் கடுககாவலும், மற்ருெரு ஐரோப்பியருக்கு 3 ஆண்டு கடுங் காவலும் விதிக்கப்பட்டது.

### ஐரோப்பியர்கள் எதிர்ப்பு

அல்ஜீயர்ஸ், ஏப்ரல் 6

அல்ஜீரியக் கொள்கை சம்பந்தமாக பிரான்ஸ் நடத்தும் வாக்குக் கணிப்பை எதிர்த்து, அல்ஜீரியாவிலுள்ள ஐரோப்பியர்கள் தங்கள் வீடுகளில் எதிர்ப்புக் கொடிகளைப் பறக்க விட்டுள்ளனர்.

---

## பாதுகாப்புச்சபை கூடியது

நியூயோர்க், ஏப்ரல் 6

இஸ்ரேல்சிரியா எல்லையில் ஏற்பட்ட கைகலப்புசம்பந்தமாக இஸ்ரேலும், சிரியாவும் செய்து கொண்ட புகாரை நேற்று ஐ. நா. பாதுகாப்புச் சபை கூடி ஆராய்ந்தது.

# உப்பை பதுக்கிய 12 வர்த்தகர்கள்

## வழக்கு தொடரப்படும்

கொழும்பு, வெள்ளி

புறக்கோட்டையைச் சேர்ந்த 12 வர்த்தகர்கள்மீது, 60 அந்தர் உப்பைப் பதுக்கிவைத்திருந்ததாக வழக்குத் தொடரப்படவிருக்கிறது. கடைகளில் பதுக்கப்பட்டிருந்த இந்த உப்பு நேற்றுக் கைப்பற்றப்பட்டது. உணவுக் கமிஷனர் திரு. ஆர். எஸ். ஆர்னேல்டா, உப்புக் கமிஷனர் திரு பி. ஆர். தேவராஜன் ஆகியோர் கைப்பற்றப்பட்ட உப்பைப் பார்வையிட்டனர்.

## போதுமான உப்பு கையிருப்பில் இருக்கிறது

கொழும்பு, சனி

பாவனையாளர்கள் கூட்டுறவுக் கடைகளில் உப்பைப் பெறுவதில் தாமதம் ஏற்படாமலும், கள்ள மார்க்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்காமலும் இருக்கும் பொருட்டு உணவுக் கமிஷனர் திரு ஆர்னேல்டாவும், உப்புக் கமிஷனர் திரு. தேவராஜனும் முயற்சி எடுத்துக்கொண்டனர்.

இன்று முதல் எல்லா கூட்டுறவுக் கடைகளிலும் ராத்தல் 6 சத.வீதம் உப்பைப் பெறுக் கொள்வதற்கு உப்புக் கமிஷனர் ஏற்பாடு செய்துள்ளார். மக்களின் சராசரித் தேவையைப பூர்த்திசெய்யக்கூடிய அளவு கையிருப்பு, அரசாங்கத்திடம் இருப்பதாய் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உப்பு பற்ருக்குறை ஏற்படுவதற்கு கையிருப்பைப் பதுக்குவவதத் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை என உணவுக் கமிஷனர் தெரிவிக்கிருர். வாரம் ஒன்றுக்கு 1500 டன் உப்பு இறக்குமதி செய்யப்படுவதாயும், ஆனல் நாட்டின் தேவையோ 1200 டன் மட்டுமே என்றும் அவர் கூறினர்.

## காவடிச் சிந்து; விசித்திர ஆராய்ச்சி

சென்னை, ஏப்ரல் 6

"தமிழ் நாட்டுப் பாடல்களில் மிக பிரபலமான காவடிச் சிந்து பாடல்கள் சிந்து நாட்டிலிருந்து தோன்றியது என்று ஒரு ஆராய்ச்சியாளர் கூறினர். காவடிச் சிந்து என்ருல் சிந்துவிலிருந்து வந்திருக்க வேண்டுமென அவர் எண்ணிவிட்டார்.

---

## ஈழ மாதா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நீர் என்ன படித்திருக்கிறீர்?"

எதிரி: "நான் எஸ்.எஸ்.ஸி. படித்திருக்கிறேன்"

மாஜிஸ்ட்ரேட்: "இது நாட்டின் வேலையில்லாத்திண்டாட்டத்தைக் காட்டுகிறது ஒழுங்கான வழியில் பொருள் சேர்க்க முயலும். அவரது டிப்பாசிட்டை கொடுத்துவிடும்படி நான் உமக்கு ஆலோசனை கூறுகிறேன். வழக்குகள் விசாரணைக்குப் போகும்படி விடாதீர். ஈழமாதாவின் பெயரால் இவ்விதக்காரியங்கள் செய்யாதீர்.

மாஜிஸ்ட்ரேட் எதிரியை 500 பிணையில் விடுத்து, அடுத்த விசாரணையை வருகிற 15-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

---

## முதலிடம்

கொழும்பு, வெள்ளி

சட்ட விரோதக் குடியேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கட்டிடங்களும், ரஸ்தாக்களும் அமைப்பதற்கான வேலைகளுக்கு அரசாங்கம் முதலிடம் கொடுக்கும் என அறிவிக்கப்படுகிறது.

# தப்பியோடிய கைதியை சுட்டுக் கொன்ருர்

## வேலூர் பொலிஸ்காரருக்கு 4 ஆண்டு கடுங்காவல்

வேலூர், ஏப் 6

விசாரணைக் கைதி ஒருவரைச் சுட்டுக் கொன்றதாக வரதன் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மீது நடைபெற்ற வழக்கில் வட ஆற்காடு ஜில்லா செஷன்ஸ் நீதிபதி எதிரிக்கு 4 ஆண்டு கடுங்காவல் விதித்து தீர்ப்புக் கூறினர்.

இவ்வழக்கு சம்பந்தமாகக் கூறப்பட்டதாவது

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரை ரிசாவ் பொலிசைச் சேர்ந்த வரதனும் மற்ருெரு கான்ஸ்டபிளும் வைத்திய சோதனைக்காக அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ருர்கள். வழியில் கைதி தப்பியோடி, கான்ஸ்டபிள்கள் மீது கற்களை வீசியெறிந்தான். கான்ஸ்டபிள் வரதன் தனது கையில் இருந்த துப்பாக்கியால் சுட கைதி குண்டடி பட்டு இறந்தான்.

சம்பவத்தை எதிரி ஒப்புக்கொண்டு தற்காப்பிற்காக அவ்வாறு சுட்டதாக வாதாடினர்.

தற்காப்பு என்ற உரிமையை எதிரி அதிகப்படியாக எடுத்துக் கொண்டதாக வழக்கை விசாரித்த செஷன்ஸ் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினர். தற்காப்பு உரிமைக்கென்றிருக்கும் நியாயமான பலத்தைவிட அதிகப்படியான பலத்தை எதிரி பிரயோகித்திருக்கிருர் என்றும், கொலை செய்யும் நோக்கம் எதிரிக்கு இல்லையென்ருலும், துப்பாக்கியால் சுடுவது மரணம் சம்பவிக்கும் என்பது அவருக்கு தெரிந்திருக்க வேண்டுமென்றும் நீதிபதி கூறினர். எதிரி ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆனதினல் துப்பாக்கியை உபயோகிக்கும் முறை நன்ருகத் தெரிந்திருக்க வேண்டுமென்று நீதிபதி கூறி எதிரிக்கு 4 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார்.

---

## ரூ. 100-க்கு ஒரு ரேடியோ

பெங்களூர், ஏப்ரல் 6

ரூபாய் நூறுக்கு மேல் போகாத விலையில் ரேடியோ கிடைக்க உற்பத்தித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பாரத் எலக்ட்ரானிக்ஸ் இந்த பரீட்சார்த்த திட்டத்தை பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் துவக்கி வைத்தார்

எ. சி. டி. சி. ரேடியே உற்பத்திக்கான இத்திட்டத்திற்கு "பெல்டோன்" என்று பெயர்.

வருடத்திற்கு 5000 ரேடியோ செட்டுகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு இந்தத் திட்டம் வளர்ச்சியடையும் என்று நிர்வாகத்தினர் எதிர்பார்க்கின்றனர். அந்த அளவுக்கு உற்பத்தி வந்ததும் ஒரு செட் ரூ. 100 க்கு மேற் போகாத விலையில் கிடைக்கும்.